


# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2053 துலை நல்லோரை ஐப்பசித் திங்கள் 11ம் நாள் நிறைமதி அன்று (28-10-2023 சனிக்கிழமை) வெளியீடு +94 21 221 2739


## திருமூலநாயனார் குருபூசை




திருமந்திரம் தந்த திருமூலநாயனார் குருபூசை ஐப்பசி தோணி (ரேவதி) விண்மீன் அன்று (28-10-2023) சனிக்கிழமை தென்னாட்டில் கொண்டாடப்படும்.

# பழந்தமிழர் பண்பாட்டில் தீபங்கள் ஏற்றி வழிபடும்

# திருக்கார்த்திகை இம்முறை கார்த்திகை 10ம் நாள் (நவ 26)

பழந்தமிழர் பண்பாட்டில் தீபங்கள் ஏற்றி வழிபடும் திருக்கார்த்திகையானது, இம்முறை கார்த்திகை 10ம் நாள் (நவ 26) கொண்டாடப்படுகிறது. கார்த்திகை மாதத்தில் வரும் நிறைமதியானது (பூரணை) , கார்த்திகை மீது சந்திரன் வரும் போது கொண்டாடப்படும். இதுவே கார்த்திகை தீபமாகும்.கார்த்திகை தீபத்தின் முதல் நாள், ஏற்றப்படும் தீபம் பரணி தீபமாகும். அன்றை தினம் பரணி நட்ச்சத்திர நாளாக இருக்கும்.

இறைவனைத் தீபம் ஏற்றி வழிபடுவது எல்லா மங்களங்களையும் தந்து வாழ்வைப் பிரகாசிக்கச் செய்யும். எத்தனை எத்தனையோ அரசர்கள், கோயில்களில் தீபம் ஏற்றுவதையே மிகச் சிறந்த திருப்பணியாகச் செய்துள்ளனர். எல்லா நாளுமே தீபம் ஏற்றி வழிபடுவது உயர்வான பலன் தரும் என்றாலும், கார்த்திகை மாதத்தில் ஆலயங்களில் தீபம் ஏற்றி வைப்பதும், இல்லத்தில் இருவேளைகளில் விளக்கேற்றுவதும் எல்லா மங்களங்களையும் தந்து வாழ்வை ஒளிமயமாக்கும்.

கார்த்திகை மாதம் முழுதும் தினமும் காலை மற்றும் மாலையில் வீடுகளிலும், ஆலயங்களிலும் விளக்கேற்றி வழிபடுவது சாலச்சிறந்தது ஆகும்.

பொதுவாக கார்த்திகை மாதம் என்பது முருகனுக்குரிய வழிபாடுகள் செய்யக்கூடிய மாதமாகும். இந்த மாதத்தில் தினமும் தீபம் ஏற்றி வழிபாடு செய்யும் போது தடைகள் அகலும். திருக்கார்த்திகை தீபம் சிவனுக்காக ஏற்றப்படுகிறது. இது திருவண்ணாமலையில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

**இல்லக விளக்கது இருள் கெடுப்பது**
**சொல்லக விளக்கது சோதி உள்ளது**
**பல்லக விளக்கது பலருங் காண்பது**
**நல்லக விளக்கது நமச்சிவாயவே**

- அப்பர் தேவாரம்

எண்ணெய்த் தீபம் ஏற்றுவது தான் சிறப்புடையது. மனதில் இருக்கும் தீய சிந்தனைகள் எனும் இருளை நீக்கி நல்லறிவு எனும் ஒளிபெறச் செய்வது இவ்விளக்கு. எண்ணெய் ஊற்றி திரி போட்டு விளக்கேற்றுபவர்களை தெய்வம் என்றும் பிரியாமல் இருந்து அருள்பாலிக்கும் என்பது ஆன்றோர் வாக்கு. “விளக்கிட்டார் பேசு சொல்லின் மெய்ஞ்நெறி ஞானம் ஆகும்’ என்கிறார் திருநாவுக்கரசு சுவாமிகள். “விளக்கேற்றினால் நல்லறிவு கிட்டும்’ என்பது இதன் பொருள்.



## சித்தாந்தக் கலைமணி பேராசிரியர் அருணை பாலறாவாயன் ஐயா அவர்கள் யாழ் வருகை



சென்னை லொயலாக் கல்லூரியின் ஓய்வுநிலை பேராசிரியராகிய, அருணை பாலறாவாயன் அவர்கள், ஐப்பசித் திங்கள் 11ம் நாள் நிறைமதி அன்று (28-09-2023 சனிக்கிழமை), அகில இலங்கை சைவமகா சபையுடன்யாழ்பல்கலைக்கழக சைவ சித்தாந்தத்துறை இணைந்து நடாத்தும் ‘திருமந்திர மாநாட்டில்’ கலந்து சிறப்பிப்பதற்காக தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார்.

சித்தாந்தக் கலைமணி, மாகவித்துவான், காஞ்சிபுரம் சி. அருணை வடிவேலு முதலியார் அவர்களின் மகனான இவர், சைவ சித்தாந்தத்தில் மிகுந்த ஞானம் பெற்ற பேராசிரியராவார். இவர் தமிழ்நாட்டவர்களுக்கும், வெளிநாட்டவர்களுக்கும் இன்றளவிலும் பல கருத்தரங்கங்கள், பயிற்சி வகுப்புக்களை நடாத்தி வருவதோடு, சைவ சித்தாந்தம் தொடர்பான பல நூல்களை எழுதி, பல பட்டங்களையும் பெற்றவராவார். அத்துடன்யாழ்பல்கலைக்கழகசைவசித்தாந்தத்துறையின், முதுகலைமானி கற்கை நெறியில், சைவ சித்தாந்த வகுப்பினை இணையவழி மூலம் எடுத்துவருகிறார். அந்த வகையில் இவருடைய வருகை மிகுந்த பயனுள்ளதாக அமையும் என்பதில் ஐயமில்லை. சிவகுருநாத குரு பீடத்தின் தலைவர் சுவாமி வேதவித்தியாசாகர் அவர்களும் மற்றும் தென்னாடு மடத்துப் புலவர் சிவ. செந்தமிழாதன் அவர்களும், ஐயாவை பலாலி விமான நிலையத்தில் வரவேற்றனர்.

திருச்சிற்றம்பலம்



# சிட்னி முருகன் திருக்கோயிலில் மூன்றாவது திருக்குடமுழுக்கு தை 8 (சன 22)

அருள்மிகு சிட்னி முருகன் திருக்கோயிலின் மூன்றாவது திருக்குடமுழுக்கு மங்கலம் ஆண்டு (ஆங்கில ஆண்டு 2024) தைத்திங்கள் 8ம் நாள், மிருகசீரிட நட்ச்சத்திரமும் பதிற்றிருமைப் பிறைநாளும் கூடிய, நன்னாளில் நடைபெறவிருக்கிறது. (சனவரி 22ம் திகதி). இதற்காக கோயிலில் பல திருத்தவேளைகளுடன் கருங்கல் பீடங்கள் பதிக்கப்பட்டும் வருகின்றன. கோபுரம், கோயில் வெளி பண்டிகைகள் மற்றும் தேர் முட்டியிலும் சிறப்பு வேலைப்பாடுகள், நிறப்பூச்சு என்பன நடைபெற்று வருகின்றது.


மீண்டும் புதுப்பொலிவுடன் சிட்னி முருகன் கோயில் குடமுழுக்கு காணவிருக்கிறன. தைத்திங்கள் 4ம் நாள் கிரிகைகள் ஆரம்பமாகி, தை 6 , 7ம் திகதிகளில் (20-01-2024 / 21-01-2024) எண்ணைக்காப்பு இடம்பெற்று, தை 8ம் (சன 22) நாள் முருகன், பிள்ளையார், சிவன், அம்மன், வள்ளி தெய்வயானையுடனான முருகன் உடனான மூர்த்திகளுக்கும், மற்றும் கோபுரம், விமானம் போன்ற புனித இடங்களுக்கும் பெருஞ்சாந்தி திருநீர் சொரியப்பட்டு குடமுழுக்கு இடம் பெறும்.

# திருமந்திர ஆன்மீக மாநாடு - 2023

மூலன் உரைத்த மூவாயிரம் தமிழான திருமந்திரத்தை முன்வைத்து, அகில இலங்கை சைவமகாசபையுடன் யாழ் பல்கலைக்கழக சைவ சித்தாந்ததுறை இணைந்து **‘ஒன்றே குலமாய் திருமந்திரம் காட்டும் அன்பே சிவத்திற்கு உயிர்கொடுப்போம்’** எனும் தொனிப்பொருளில் நடாத்தும் **‘திருமந்திர ஆன்மீக மாநாடு’** எதிர்வரும் ஐப்பசித் திங்கள் 11ம் நாள் நிறைமதி அன்று (28-09-2023 சனிக்கிழமை) காலை 8.30 மணிமுதல் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் சைவ சித்தாந்த துறைத்தலைவர் கலாநிதி பொன்னத்துரை சந்திரசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

திருமந்திர மாநாட்டை மையமாக கொண்டு வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய பிரதேச மாணவர்களிடையே நிகழ்நிலையில் திருமந்திர போட்டிகளும் இடம்பெற்றுக்கொண்டுள்ளன. இதே வேளை இம்மாநாட்டிற்கு முந்தய வாரத்தினை திருமந்திர வாரமாகவும் அகில இலங்கை சைவமகாசபை மற்றும் யாழ் பல்கலைக்கழக சைவ சித்தாந்ததுறை அறிவித்துள்ளது. இந்த வாரத்தில் திருமந்திரத்தின் சிறப்பை அனைவருக்கும் தெளிவுபடுத்தும் முகமாகவே இச் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது.

யாழ் பல்கலைக்கழக சைவ சித்தாந்த துறை, பல்கலைக்கழக துணைவேந்தர் உட்பட யாழ் பல்கலைக்கழக சமூகத்தினரின் ஒத்துழைப்பு பெரிதும் உந்துதலாக இந்நிகழ்வை முன்னெடுத்தது செல்கின்றது. மேலும் வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய பல இடங்களிலுள்ள சைவ நிறுவனங்களும் இம்மாநாட்டிற்கு ஆதரவை வழங்கி வருகின்றன.




குறித்த மாநாட்டில் திருமந்திர மாநாட்டு மலர்ஒன்று வெளியீடு செய்து வைக்கபடவுள்ளது. இந்தியாவிலிருந்து ஓய்வு நிலை பேராசிரியர் கலாநிதி அருணை பாலறாவாயன் அவர்களும் இதற்காக கலந்துகொள்ளவுள்ளார். காலை மற்றும் மாலை என இரு பகுதிகளாக ஒழுங்கு படுத்தப்பட்டுள்ள மாநாட்டிற்கு வருகை தருபவர்களுக்கும்மதியஉணவும்தயார்படுத்தபட்டுள்ளது.

குறித்த நிகழ்வின் முதன்மை விருந்தினராக யாழ் மாவட்ட செயலர் அம்பலவாணர் சிவபால சுந்தரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக சிவசிறீ சரவேஸ்வர ஐயர் பத்மநாதன் (இந்து கற்கைகள் பீட பீடாதிபதி யாழ் பல்கலைக்கழகம்), செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன், திருமிகு கிருஷ்ண பிள்ளை குணநாயகம் (மட்டக்களப்பு மாவட்ட இந்து கலாசார திணைக்கள உத்தியோகத்தர்), கௌரவ விருந்தினர்களாக கலாநிதி சுகத்தினி முரளிதரன் (தலைவர் இந்து நாகரீகதுறை யாழ் பல்கலைக்கழகம்), திருமிகு நாகையா வாமன் (தலைவர் இந்து நாகரீகதுறை கிழக்கு பல்கலைக் கழகம்) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ள அதேவேளை நல்லை திருஞானசம்பந்தர் ஆதினம், தென்கையிலை ஆதீனம், மெய்கண்டார் ஆதீனம், திருநாவுக்கரசர் ஆதீனம் நுவரெலியா, சிவகுரு ஆதினம் நல்லூர் ஆகியவற்றின் குரு முதல்வர்களும் தருமை ஆதீன திருக்கேதீச்சர கிளைமட தம்பிரான் அவர்களும் பங்குபற்றி ஆசி வழங்கவுள்ளனர்.

**திருச்சிற்றம்பலம்**

## சுவாமி விபுலானந்தர் நூலகம் திறப்பு விழா

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் திருக்கோவில் திருஞானவாணி அறநெறிப் பாடசாலைக்கான மாதிரி நூலகம்அமைக்கும் செயற்றிட்டத்தில் **“சுவாமி விபுலானந்தர் நூலகம்”** திறந்து வைக்கும் நிகழ்வானது, கடந்த புரட்டாசித் திங்கள் 21ம் நாள் (08-10-2023) ஞாயிற்றுக் கிழமை அன்று காலை 9.00 மணிக்கு திருஞானவாணி அறநெறிப்பாடசாலையில் இடம்பெற்றது.




இத்திறப்பு விழா நிகழ்வானது அறநெறிப்பாடசாலை மற்றும் திருஞானவாணி முத்தமிழ் மன்றத்தின் தலைவர் சிவத்திரு ஆ. கணேசமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு திருமுன்னிலை அதிதியாக அருள்மிகு சித்திரவேலாயுத சுவாமி திருக்கோயில் அர்ச்சகர் சீர்வளர்சீர் நீ.அங்குசநாதக் குருக்கள் அவர்களும், பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவத்திரு வே.ஜெகதீசன், அவர்களும் கௌரவ அதிதியாக திருக்கோவில் பிரதேச செயலாளர் சிவத்திரு த. கஜேந்திரன், உதவிப்பிரதேச செயலாளர் சிவத்திரு க.சதிசேகரன் அவர்களும், சிறப்பு அதிதிகளாக மாவட்ட இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகததர் சிவத்திரு கு. ஜெயராஜி மற்றும் திருக்கோவில் பிரதேச இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தேவதராஜ் நிஷாந்தினி அவர்களும் மற்றும் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.

**திருச்சிற்றம்பலம்**

## ஈரான் நாட்டுப் பிரதிநிகள் இந்து மாமன்றம் வருகை

ஈரான் நாட்டு உச்சத் தலைவரின் பிரதிநிதி திரு. ஹுஜத்துல் இஸ்லாம் ஹத்தம் பூரி அவர்களும், ஈரான் நாட்டு கலாசார ஆலோசகர் வைத்திய கலாநிதி பாமான் மொசாமி கொடர்ஸி அவர்களும் இலங்கையில் அனைத்து மத நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்திப்பது தொடர்பாக, புரட்டாசித் திங்கள் 23ம் நாள் (10-10-2023) செவ்வாய்க்கிழமை அன்று அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கு நல்லெண்ண வருகை ஒன்றை மேற்கொண்டிருந்தார்கள்.

அவர்களை அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சார்பாக தலைவர் சிவத்திரு மா. தவயோகராஜா, பொதுச் செயலாளர் சிவத்திரு வே. கந்தசாமி, பொருளாளர் திருமதி. அ.கயிலாசபிள்ளை, துணைத் தலைவர் சிவத்திரு த. முத்துக்குமாரசாமி ஆகியோர் சந்தித்து, வரவேற்று அவர்களுடன் கலந்துரையாடினர்.



**திருச்சிற்றம்பலம்**

## அறநெறி மாணவர்களுக்கான ஒன்பானிரவு சிறப்பு போட்டிகள்



தெல்லிப்பழை ஞானலிங்கேசுவரர் அறநெறிப் பாடசாலையில் ஒன்பானிரவை (நவராத்திரி) முன்னிட்டு மாணவர்களுக்கான ஒன்பானிரவு சிறப்பு போட்டிகள் கடந்த ஐப்பசித் திங்கள் 6ம் நாள் (23-10-2023) திங்கள்கிழமை அன்று தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

ஒன்பானிரவு சிறப்பு போட்டிகளாக கோலம் போடுதல், மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய போட்டிகள் நடாத்தப்பட்டு அதில் பங்குபற்றிய மாணவர்களுக்கு (54 மாணவர்கள்) பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. இதில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவர்களுக்கு சிறப்பு பரிசில் வழங்கும் நிகழ்வு, வருகின்ற ஐப்பசித் திங்கள் 11ம் நாள் (28-10-2023) சனிக்கிழமை, நிறைமதியுடன் கூடிய நாளன்று தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில் இடம்பெறும்.

**திருச்சிற்றம்பலம்**

# அடியவரின் எளிமையான கேள்விகளும் திருத்தொண்டரின் ஆழமான பதில்களும்

**ஐயா ஆத்மா, ஆன்மா இரண்டும் ஒன்றா ? ஆத்மா, ஆன்மா மற்றும் உயிர் இவை மூன்றிற்கும் என்ன வேறுபாடு ?**



திருத்தொண்டர் முனைவர் இராமகிருஷ்னன் சிவகுமார் ( பினாங்கு அறிவியல் பல்கலைக்கழகம் )

*1)* ஆத்மாவாக தன் அகக் கட்டு கிழித்து எழுவது உயிர் (Rend asunder the inner tie ligature of psyche )

ஆதன் என்பது ஆகின்ற அல்லது ஆகும் உயிர்பொருள் என்று பொருள்படும்

வாழி ஆதன் வாழி அவின் - ஐங்குறுநூறு (10)

ஆதன் என்னும் இயற்பெயருக்கு ஆ → ஆகு என்பதே முன்னிலையாக அமைந்துள்ளது.

ஆ → ஆகு → ஆதல் = தோன்றுதல், வளர்தல், செழித்தல்,

தொல்காப்பியர் “ஆதனும், பூதனும் கூறிய இயல்போடு பெயரோற் றகரந் துவரக் கெடுமே (தொல். சூ 348) என்ற ஓர் இலக்கணம் வகுத்துள்ளார்.

ஆதன் பூதன் என்ற சொற்கள் ஆதன் -ஆத் புதன்- பூத் என்று குறை உரிச் சொற்களாக மெலிந்து தொல்லோரது வழக்காறு பேணும் என்பது இதன் இலக்கணமாகும்.

எ.கா : ஆதன் + தந்தை = ஆத் + அந்தை = ஆ + ந்தை = ஆந்தை

ஆதன் + மா = ஆத் +மா = ஆத்மா என்று உயிர் தன் கட்டு நிலை கிழித்து அகன்று விரிவதை ஆத்மா என்று அழைக்கின்றோம்.

*2)* ஆன்மாவாக தன் நிலையில் அணுத்துவம் பெறாது அகற்சி பெறும் உயிர் (Overcoming atomization by expanding the psyche)

ஆன்மா = ஆன் +மா : ஆன, ஆகு பொருள் + மா–பெரிது என்று இருப்பில் அகற்சி பெறும்.

ஆன்: அவ்விடம் (தொல். பொருள். அகத்.24.)

அகற்சி: அருளொடு புணர்ந்த வகற்சியானும் (தொல்.பொ. 76).

பொதுவில் ஆத்மா, ஆன்மா என்ற இந்த இருசொற்களும் பொருள் விளக்கத்தால் ஒன்றையே குறிப்பாகக் குறிக்கின்றன என்று ஏற்கலாம்.

*3)* உயிர் தன் கட்டுகளை உடைத்து உய்வை நோக்கி உய்து நகரும் இயல்புடையது ( subsist and redeem from the shackles and move towards destiny-the GLOBAL END)

தமிழர்கள் உயிர்களை ‘உயிர்’ என்று அழைத்தற்குப் பெரும் அறிவியல் காரணங்கள் உண்டு.

உயிர் என்பது வேர்ச்சொல்லில்

தேவநேயப் பாவாணர் தமிழர் மதம் பக்.3 என்ற நூலிலிருந்து

உ - உய். உய்தல் = முன்செல்லுதல், செல்லுதல்.

உய்த்தல் = முன்செலுத்துதல், செலுத்துதல்.

உய் - இய் - இயவு = செலவு.

உ - உய். உய்தல் = முன்செல்லுதல் (to drive away), செல்லுதல்., நீக்குதல் (dispel as darkness)

**தொல்தமிழ் சுமேரியத்தில்:**

| தொல்தமிழ் சுமேரியம் | பொருள் விளக்கம் |
|---|---|
| உ (U) | உலகம் (earth) |
| உ (u) | ஒட்டு (ride) |
| உவ U2.A ua or | முன்னுணர்வாளர் (provisioner) |
| உ-இல் u'il | ஏந்திச் செல்லுநர் (carrier) |
| உழல் U2.LAL ula | உழல் - வருந்து. உழற்சி, v. n. whirling, doubt, distress. உழன்றுக்க, to labour hard, to strive with might and main வலுக்குறைந்த (to be) feeble |



தென்னாடு
செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்
தலைமை ஆசிரியர் – தென்னாடு,
+6149949 3300, thennavan@thennadu.org



# தோன்றிய நோக்கங்கள் துலங்குமா தொலையுமா

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு** - (குறள் - 423)

தமிழர் மரபில் கருவிலே திருவானவர்கள்,பற்பல ஞானிகள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், சந்தான குரவர்கள், சங்கம் வளர்த்தவர்கள், பெருமன்னர்கள், பெருந்தச்சர்கள் என்று பலர் தோன்றி பல திருவருட்துணையோடு, ஆழமான சிந்தனைகளின் வழி சைவத்திற்கும், தமிழுக்கும் பலதொண்டுகளை ஆற்றியது மட்டுமல்ல கருத்துகள், இலக்கியங்கள்,இலக்கணங்கள், திருமுறைகள்,பாசுரங்கள், சித்தாந்தங்கள் எனப் பலவற்றை விட்டுச்சென்றுள்ளனர்.

மேலாக அவற்றினை எதிர்காலச் சந்ததியினருக்கு ஊடுகடத்த வேண்டுமென பலவகையான சங்கங்களை வகுத்துள்ளனர். இதன்வழியே கோயில்கள், ஆதீனங்கள், மடங்கள், சமய நிறுவனங்கள், சங்கங்கள், பள்ளிகள், சந்தானமரபின்வழி வரும் அறிஞர்கள், சிந்தனையாளர்கள் என்று நீளும்.இப்படியான பொது நோக்குடன், அரசு மற்றும் பொதுமக்கள் பணத்தில் தொடங்கிய நிறுவனங்களும், அதனை நிர்வகிப்பவர்களும் தோன்றிய நோக்கங்களுடன் நிற்கின்றார்களா இல்லை பொறிவாயில் அகப்பட்டு ஐந்தவிக்கிறார்களா என்று மக்கள் சிந்திக்கவேண்டும்.

பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே என்று நன்னூல் வழி சிந்திக்கவும் வேண்டும் என்ற சிந்தனை வரும். அதில் தவறில்லை ஆனால் கொள்கைவழி, சந்தான அறிவுவழி நின்று கொண்டு உலகமாற்றத்திற்கு ஈடு கொடுத்தலே அடிப்படை. உதாரணமாக கோயிலைத் தொடங்கிவிட்டு, காலம் மாறுகிறது என்று பள்ளிவாசலாக்கலாமா? ஏக இறைவன் ஒன்றெனினும் கோயிலுக்கும் பள்ளிவாசலுக்கும் தத்துவார்த்த வேறுபாடுகள் உள்ளன. அதுபோல் மொழிவழி, சித்தாந்தவழி கோயில்களையும் மேலும் வகுக்கலாம்.

ஆகவே பண்பாட்டை, சமூகத்தினை வளர்க்க விளையும் தலைமையாளர்கள், சந்தானமரபினர், சமயவாதிகள், சமுகத் தலைவர்கள் மற்றும் நிறுவனங்கள் இதனை ஆழமாக சிந்தித்து செயற்படவேண்டும். இல்லையேல் எங்கள் முன்னோர்களின் பிதிர் சாபத்திற்கு உட்படுவார்களா என்று எண்ணத் தோன்றுகிறது.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.**

உய்த்தல் = முன்செலுத்துதல், செலுத்துதல்.

உய் - இய் - இயவு = செலவு.

உ < உய் < உய < உய்தல் = to ensure salvation

ஊ < ஊன் = நீ (முன்னிலை யொருமைப் பெயர்).

ஊ < உ - உந்து. உந்துதல் = முன் தள்ளுதல்.

உ< உய் < உய் < உயர்வு

உ< உய்< உய < உயிர்

தொல்தமிழ் சுமேரியத்திலும் (உ) என்ற சொல் ஒரு நகர்ச்சியை, செலுத்துவதை வெளிப்படுத்தி உய் +இல் ஏந்தி செல்வது (Carrier) அல்லது சீவிப்பது, உழற்சி தருவது, ஈடேற முயல்வது (To besaved, redeemed)

மூலத்தமிழ் வேர்ச்சொல்லிலும், தொல்தமிழ் சுமேரியத்திலும் (உ) என்ற சொல் ஒரு நகர்ச்சியை, செலுத்துவதை வெளிப்படுத்துகிறது. உய் என்பது சீவிப்பது, ஈடேற முயல்வது, நீங்குதல், தப்புதல் போன்ற பொருள்களில் விளக்கமாவதைக் காணலாம்.

i) *சீவிப்பது* ( To live, to subsist, have being): *உண்ணா வறுங்கடும்பு உய்தல் வேண்டின் (புறம்.181, சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்)* – உன் குடும்ப வறுமையிலிருந்து மீண்டு சீவிக்க if you want relief from poverty for your suffering family.

ii) *ஈடேற முயல்வது* (To besaved, redeemed): *தினைத்தனைப் பொழுதும் மறந்துய்வனோ (திருநாவு.திருமு. 5, 1).*

iii) *நீங்குதல்* (To be relieved, as from trouble): *தாவல் உய்யுமோ (பதி. 41, 17, பரணர்)- கவலை நீங்குமோ*

iv) *தப்புதல்* (To escape, as from danger) : *சார்புடைய ராயினு முய்யார் (குறள். 900). தவத்தினில் உயர்ந்தோர் வெகுள்வராயின் கழியப் பெரிய சார்பு உடையார் ஆயினும் தப்புதல் இயலாது.*

# மயிலோடு விளையாடும் பாலமுருகன்



வினைகளைத் தீர்ப்பான் இவன்! வினைகளை அறுப்பான் இவன்! வேலையும் மயிலையும் கொண்டு பத்தர்களின் குறைகளைக் களைவான் இவன்! இவனே நம் பாலமுருகன். இது மேற்கு ஒசுத்திரேலியாவின் பேர்த் நகரில் வாழும் தமிழ் மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கை, இந்த நம்பிக்கையை இவர்களுக்குத் தந்து இவர்களை வளமாக, நலமாக வாழ வைத்துக் கொண்டிருப்பவன் தான் இங்கு கோயில் கொண்டிருக்கும் அருள்மிகு பாலமுருகக் கடவுள்.

2008இல் திருக்குடநீராட்டு கண்ட இக்கோயிலின், திருத்தல வரலாறு மிகவும் அற்புதமானது. தமிழ்நாட்டிலிருந்தும் தாயகத்தில் இருந்தும் இங்கு குடிபெயர்ந்த தமிழர்கள், தமிழர்களுக்கு என்று தமிழ் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் பறைசாற்றுவதற்கென்று ஒரு கோயிலை உருவாக்க நினைத்தார்கள். இதற்காகப் போர்த் வாழ் சைவத் தமிழ் மக்கள் ஒன்று கூடி சைவ மகாசபை என்னும் அமைப்பை உருவாக்கினர். தமிழ் கடவுளாகிய அருள்மிகு பாலமுருகனைப் பிரதானமாகக் கொண்டு முழுமையான கோயில் அமைக்க திட்டமிட்டனர். இதற்கு முன்னேற்பாடாக மண்டோகளப் சமூக மண்டபத்தில் ஞாயிறுதோறும் ஒன்றுகூடி முருகக்கடவுளை வழிபாடு செய்தனர்.

சில மாதங்களுக்குப் பின் இந்தியாவில் இருந்து செல்வமுத்துக்குமாரசுவாமி, வள்ளிநாயகி, தெய்வநாயகி, விநாயகர் ஆகியோரின் எழுந்தருளல் திருமுன்கள் (உற்சவ மூர்த்திகள்) தருவிக்கப்பட்டு திருநிலைப்படுத்தல் நடைபெற்றது. அச்சமூக மண்டபத்திலேயே ஆறு தினங்களுக்கு கந்தன் கவின் அறுமைப் பெருவிழா (கந்தஷஷ்டி), சூரன்போர், திருக்கல்யாண விழா ஆகிய விழாக்களை தமிழ்மக்கள் வெகு விமர்சையாகக் கொண்டாடிவந்தனர். இருப்பினும் பத்தர்களின் மனதில், ஒரு பெரிய கோயில் எழுப்ப வேண்டும் என்கின்ற எண்ணம் இருந்து கொண்டே இருந்தது. அதற்கான முயற்சியையும் சைவ மகாசபையினர் செய்து கொண்டே இருந்தனர். இவர்களின் கடும் முயற்சியால் கோயில் கட்டுவதற்கான அனுமதியை மேற்கு ஒசுத்திரேலியா அரசாங்கம் வழங்கியது.

மண்டோகளப் சமூக மண்டபத்திற்கு அருகிலேயே இருந்து ஒசுத்திரேலியர் ஒருவரின் நிலத்தில் கோயில் கட்டலாம் என்று சைவ மகாசபையினர் அவரை அணுகினர். முதலில் அவர் நிலத்தை வழங்குவதற்கு மறுத்தார். மறுப்புத் தெரிவித்தவன் மனிதன் என்றாலும் எங்குத் தனக்குக் கோயில் வேண்டும் என்ற முடிவு எடுத்தவன் இறைவன் நம் பாலமுருகன் அல்லவா!



**மாதுலன் சதீசன்**
**ஆண்டு 8**
**பேர்த் - ஒசுத்திரேலியா**

தமிழர்களின் பத்தி கலாச்சாரம் பற்றி உயர்ந்த எண்ணம் கொண்ட அந்த ஒசுத்திரேலியரின் கனவில் வேலுடனும் மயிலுடனும் நம் பாலமுருகன் காட்சியளித்தான். அத்தோடு நின்றுவிடாமல் மறுநாளே அவரின் நிலத்தில் எங்கிருந்தோ பறந்து வந்த மயில் தோகை விரித்து வெகுநேரமாக ஆடியது. இக்காட்சியை அவரும் அவருடைய பணியாளர்களும் வியந்து கண்டனர். ஒரு நாளுடன் தன்னுடைய திருவிளையாடலை முருகன் நிறுத்தவில்லை. அதற்குப் பிறகு பல நாட்கள் அந்த மயில் அதே இடத்திற்கு அதேநேரத்தில் வந்து தன்னுடைய தோகையை விரித்து ஆடியது. இந்நிகழ்வு ஒசுத்திரேலியரின் மனத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியது. பின்னர் அவர் அருள்மிகு பாலமுருகனுக்கு கோயில் கட்டுவதற்காகத் தன் நிலத்தை தருவதாக முழுமனதுடன் சம்மதித்தார். இச் செய்தி நம் தமிழ் மக்களின் மனதில் பேருவுவகையை ஏற்படுத்தியது.

கோயில் கட்டுவதற்கான நிலம் கிடைத்தவுடன் அங்கு குடிபெயர்ந்த ஆண்களும், பெண்களுமாக அக்காணி நிலத்தைத் தூய்மை செய்யும் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். பல்வேறு மக்களின் பல நாள் உழைப்பால் இறைவனின் திருக்கோயிலும், பூசகர் வாழ்வதற்குரிய வீடும், பசுக்கள், மயில்கள், சேவல்கள் வாழ்வதற்குரிய இடங்களும் உருவாக்கப்பட்டன. கோயில் பணிகள் முடிவுற்ற பின்னர் வெகு விமர்சையாகக் திருக்குட நன்னீராட்டு நடைபெற்றது கதிர்காமத்து மாணிக்க கங்கையிலிருந்தும், காசியில் கங்கா நதியிலிருந்தும் புண்ணியநீர் கொண்டுவரப்பட்டு திருக்குட நன்னீராட்டு நடத்தப் பெற்றது. அச்சுபதினத்தில் மயில் வந்து நின்று ஆடிய இடத்திலேயே முருகனுக்குரியக் கருவறை அமைக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

நினைத்ததை முடித்தான் பாலமுருகன். தனக்கான கோயிலையே தன்னுடைய திருவிளையாடல் மூலமே கட்டிக்கொண்டான். இன்று இக்கோயில் இயற்கை எழில் கொஞ்சும் மரச் சோலைகளுக்கு இடையே அமைந்துள்ளது. காண்பவர்களின் கண்களுக்கு இனிமையையும் வேண்டுபவர்களுக்கு அருளையும், தருகின்ற இடமாக அருள்மிகு பாலமுருகன் கோயில் அமைந்துள்ளது.

இக் கோயிலில் வாரந்தோறும் வெள்ளிக் கிழமைகளில் முருகர் வீதி உலா வருகிறார், கார்த்திகைத் திருவிழாவின் போதும் முருகன் உலா வருகின்றார். இக்கோயிலில் தைப்பொங்கல் விழா, தைப்பூசத் திருவிழா, ஒன்பானிரவு (நவராத்திரி), கந்தன் கவின் அறுமைப் பெருவிழா (கந்தஷஷ்டி), வருடாந்த திருவிழா ஆகியவை வெகுவிமர்சையாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

பல்வேறு சிறப்புக்களைப் பெற்ற இக்கோயில், “திரைகடல் ஓடி திரவியம் தேடும்” தமிழர்களால் உருவாக்கப்பட்ட கோயில். தமிழர் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் நிலை நிறுத்த வேண்டி பல நல் உள்ளங்களின் உன்னத உழைப்பாலும், நன்கொடைகளாலும், தமிழ் கடவுளுக்கென்று உருவான கோயில் என்பதில் ஐயமில்லை.

**“கருவாய் உயிராய் கதியாய் விதியாய் குருவாய் வருவாய் அருள்வாய் குகனே”** என்று கந்தர் அனுபூதியில் முருகனை வேண்டினார் அருணகிரிநாதர்.

ஆனால் மேற்கு ஒசுத்திரேலியாவில் வாழ்கின்ற நம் தமிழ் பெருமக்கள் இக் கோயிலைக் கருவில் இருந்து உருவாக்கி, தங்களின் உயிரினும் மேலானதாய்க் கருதி, இக்கோயிலே கதியாய் கிடந்து, முருகன் தான் தங்களுக்கு விதி என உணர்ந்து முருகனையே தங்களுடைய குருவாய் ஏற்று அவன் அருளை பெறுவதற்காகத் தினந்தோறும் இங்கு வந்து கொண்டிருக்கின்றனர். பாலமுருகக் கடவுளின் அருளை வேண்டி நின்று கொண்டிருக்கின்றனர்.

பாலமுருகக் கடவுளே போற்றி! எம் துயர் தீர்க்கும் பாலமுருகக் கடவுளே போற்றி! என் இனம் வாழவைக்கும் கடவுளே போற்றி! தமிழ் ஓங்க வைக்கும் கடவுளே போற்றி! போற்றி! என்று துதி பாடிக் கொண்டிருக்கின்றனர்.

இத்தகைய மேன்மைகளைப் போற்றி பாலமுருகக்கடவுளின் அருளைப் பெறுவோம்! வாழ்வில் வளத்துடன் வாழ்வோம்!

**திருச்சிற்றம்பலம்**




**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org



# மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்

திருமூலர் பெருமகனார் உரை செய்த மூவாயிரம் தமிழே திருமந்திரம். திருமூலர் இதற்கு இட்ட பெயர் 'திருமந்திர மாலை', 'தமிழ் மூவாயிரம்' என்றும் குறிப்பிடுகின்றனர். பரம்பொருளின் திருவருள் பெற்ற திருமுலர் பெருமான் அருளிய திருமந்திர மாலை, பன்னிரு திருமுறைகளில் பத்தாவதாக வைத்து போற்றப்படுகின்றது.

திருமூலர் உலகுக்கு வழங்கிய சிந்தனைக் கருத்துக்கள் பல. அதில் சிலவற்றை சான்றாக குறிப்பிடலாம். **"அன்பு சிவம் இரண்டு என்பர் அறிவிலார்"** என்று அன்பினால் இறைவனை வழிபட வேண்டும் என்பதை மிகச் சிறப்பாக முழங்கியுள்ளார்.

தமிழர் என்றும் எண்ணிப் பெருமைப்படத்தக்க பொதுமைத் தத்துவத்தை வழங்கியவர் திருமூலர். சாதி, மதம், நாடு, மொழி என்று பல தடைச் சுவர்களால் சிதறிக்கிடக்கும் மனித குலத்தை நோக்கி,

**"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்**
**நன்றே நினைமின் நமன் இல்லை"** என முழங்கினார். இவ்வாறு அவரின் தத்துவங்களை குறிப்பிட பக்கங்கள் போதாது.

பழந்தமிழ் நாட்டில் 6, 7ஆம் நூற்றாண்டுகளில் திருமுறை ஆசிரியர்களான திருமூலர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய பெருமக்கள் தோன்றிச் சைவசமயத்தை வளர்த்தார்கள். பிற சமய வழிபாடுகள், கொள்கைகள் சைவ சமயப் பெரியார்களால் வெற்றி காணப்பெற்றுச் சைவம் தழைத்தோங்கியது.

இக்காலக் கட்டத்தில் தோன்றியவைகளே திருமுறை இலக்கியங்கள் ஆகும். திருமுறைகளில் காலத்தால் முந்தியது காரைக்கால் அம்மையாரின் பாடல்கள் என்றாலும் நூல் வடிவில் திருமந்திரம் முதன்மை பெறுகிறது. 6ஆம் நூற்றாண்டின் இறுதியில் திருமூலரால் பாடப்பெற்ற பாடல்கள் திருமந்திர நூலாகத் தொகுக்கப்பட்டன. அதனையடுத்து 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியவர்கள் பாடிய தேவாரப் பாடல்கள் முதல் ஏழு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டன. பின்னர் 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த (கால வேறுபாடு உண்டு) மாணிக்கவாசகரின் திருவாசகம், திருக்கோவையார் இரண்டும் எட்டாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டன. இவ்வாறு இருக்கையில் திருமந்திரத்தை பத்தாம் திருமுறையாக தொகுக்கப்பட்டிருப்பது கேள்வியாகவே உள்ளது.

எனவே 6ஆம் நூற்றாண்டு முதல் 9ஆம் நூற்றாண்டுவரை இடைப்பட்ட காலத்தைத் திருமுறைக் காலம் எனக் கூறுவர். இந்நூற்றாண்டில் சைவ சமயம், சிவவழிபாடு ஆகியவை தமிழகத்தில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தன. சைவத் திருக்கோயில்களும், திருவிழாக்களும் உன்னத நிலையில் இருந்தன.

ஆனால் இன்றைய நாட்களில் இளம் சைவ அடியார்கள் என்பது கேள்விக்குறியாவே உள்ளது. அதனை நிவர்த்தி செய்யும் முகமாகவே தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் செயற்பட்டு, குறிப்பாக பார்த்தல் தென்னாடு ஆசிரியர்கள் ஆகட்டும், தென்னாட்டினுடைய சைவ மாணவர் சபை நிர்வாகத்தினர் ஆகட்டும் அனைத்திலும் இளையோர்கள் நின்று செயற்படுகின்றமை போற்றுதலுக்குரியதாகும். இவ்வாறு இளையோர்கள் சைவம் வளர்க்கும் பணியில் முன்வர வேண்டும்.

திருமந்திரத்தை முன்வைத்து சைவ மகா சபையினர், யாழ் பல்கலைக்கழக சைவ சித்தாந்த துறையுடன் இணைந்து ஏற்பாடு செய்கின்ற **"திருமந்திர மாநாடு"** பாராட்டத்தக்கத்தகும். மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழுக்கு இவ்வாறான மாநாடு கட்டாய தேவையாகும். இவ்வாறான சிவப்பணிகளை அனைத்து சைவ அமைப்புகளும் முன்னெடுத்து செய்ய, யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமே என்று எம்பெருமான் எம் சிவப்பணி வளர்ந்திட திருவருள் புரிவாராக.

**"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யு மாறே"**
**திருச்சிற்றம்பலம்**

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்


சிவஞானச் செல்வர். மருத்துவர் ஈசான பிரதாபன் தேசிகர்

**பிள்ளையார் ஐந்து கரத்தான் என்று போற்றப்படுவதன் விளக்கம் யாது?**

பிள்ளையாரின் துதிக்கையும் ஒரு கரமாகக் கொள்ளப்பட்டு ஐந்துகரம் உடையவர் என்று போற்றப்படுவார். பிள்ளையார் தமது வலதுபக்கத்து மேல் கரத்தில் அங்குசத்தினையும் இடதுபக்கத்து மேல் கரத்தில் பாசத்தினையும் ஆயுதங்களாகக் கொண்டிருப்பார். வலது பக்கத்து கீழ் கரத்தினால் அபய முத்திரை காட்டியவாறு இருப்பார். இக்கரம் அபயகரம் எனப்படும். உயிர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கும் கரம் இதுவாகும்.

இடதுபக்கத்து கீழ்க்கரம் வரத கரம் எனப்படும். இக்கை வரத முத்திரை காட்டியவாறு விளங்கும். கீழ்நோக்கி விரல்கள் விளங்குமாறு கையினைப் பிடித்திருத்தல் வரத முத்திரை எனப்படும். பிள்ளையாரின் திருவடியினையே உயிர்கள் சென்றடைய வேண்டும் என்னுஞ் செய்தியினை உணர்த்தும் வகையில் இக்கரம் விளங்கும். இதனால், இக்கரம் வரதகரம் எனப்படும். சிலசமயம் இக்கரம் மோதகம் ஏந்தியவாறும் விளங்கும்.

பாசம் ஏந்திய கரம் படைத்தல் தொழிலையும் அபயகரம் காத்தல் தொழிலையும் அங்குசம் ஏந்திய கரம் அழித்தல் தொழிலையும் துதிக்கை மறைத்தல் தொழிலையும் மோதகம் ஏந்திய கரம் அல்லது வரதகரம் அருளல் தொழிலையும் குறிக்கும்.

**சிவன் கோயில்களினைப் பாடசாலைகளிலும் பல்கலைக்கழங்களிலும் கட்டும்போது, பிள்ளையார் கோயில் கட்டுவதே நல்லது என்று சிலர் கூறி, முட்டுக்கட்டைகளினை உருவாக்குகின்றனரே. இது சரியா?**

இந்தியாவில் விளங்கும் சமயங்களில் சைவசமயம் சிவபெருமானை படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களினைத் தானே முன்னின்றும் புண்ணிய உயிர்கள் சிலவற்றுக்கு பிரம்மா திருமால் உருத்திரன் அணுமகேசுவரன் அணுசதாசிவன் பதவிகளினை வழங்கி அதிட்டித்து அத்தொழில்களினைச் செய்வித்தும் விளங்கும் மங்கலக்கடவுள் என்று போற்றும் சமயமாகும். வைணவசமயம் திருமாலே முழுமுதற் கடவுள் என்று கொள்ளும் சமயமாகும். ஆதிசங்கரர் கட்டமைத்த சுமார்த்தமதம் சிவபெருமானும் உருத்திரனும் ஒன்றேயென்று கூறி, ஐந்தொழிற் கடவுளாகச் சிவபெருமானை ஏற்காத சமயமாகும். இந்தசமயத்தின்படி திருமால் மங்கலக்கடவுளாவர். இந்த உண்மைகளினைத் தெளிந்துகொள்ளாது, சுமார்த்தமதத்தார் சிவபெருமானை அழித்தற்கடவுள் என்று கூறியகதைகளினைக் கேட்டு, நம்மவர் பயந்து சிவபெருமானைப் பிரதிட்டை செய்து வழிபட அஞ்சத்தொடங்கினர். அதனாலேயே, பிள்ளையார் கோயில்களினைப் பாடசாலை முதலியவற்றில் கட்டத்தொடங்கினர்.

பௌத்தர்கள் புத்தரின் சிலையினை வேலைத்தளங்கள் ஒவ்வொரு அறைகளிலும் ஒவ்வொரு இடங்களிலும் வைத்து, தேனீரும் பூவும் சமர்ப்பித்து எளிமையாக வழிபடுவர். ஆனால் வெறும் நீரும் பூவுமே சிவபெருமானினை வழிபடப்போதும் என்று திருமுறைகள் வழிப்படுத்தியிருக்க, நாம் எமது திருமுறை சைவ சாத்திரங்களினை மதியாமல் புறச்சமயத்தவர்களாகிய சுமார்த்தமதத்தர் கூறிய கதைகளினைக்கேட்டு சிவவழிபாட்டினைக் கைவிட்டு நிற்கின்றோம். சிவலிங்கத்தினை வைத்து நீரும் பூவும் கொண்டு வழிபட்டாலே போதும் என்னும் எளிமையான வழிபாட்டினை திருமுறைகள் காட்டியருளியிருக்க, சிவபெருமானினைப் பிரதிட்டை செய்தால் பராமரிக்க முடியாதென்றெல்லாம் பயங்காட்டியிருப்பவர் அனைவரும் சிவபாதகர்களேயாம். சுந்தரமூர்த்தி நாயனார் பெருமான் **"பிழை பொறுப்பானை பிழையெல்லாம் தவிரப் பணிப்பானை"** என்று அருளிச்செய்துள்ளதினையும் நாம் சிந்தித்து உய்யத் தவறியுள்ளோம். பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படிபட்ட சிவபெருமான் அடியார்க்கு எளியவன் என்பதினையும் மறந்து உழன்றுகொண்டிருக்கின்றோம்.

சிவபெருமானின் நடராசர், தென்முகக்கடவுள், சரபேசுவரர் முதலிய வடிவங்கள் போன்று சிவபெருமானின் பிரணவ வடிவமே பிள்ளையார் என்பதினால், சிவன் கோயிலில் பிள்ளையார் வழிபாடே சைவாகம மரபாகும். மேலும், சிவன்கோயிலே தமிழர் தனித்துவ அடையாளமாக இலங்கை மண்ணில் விளங்கிவருவதினால், சிவன்கோயில் எழுப்புவதே தமிழரின் அடையாளத்தினை வலுவாகப் பேணும் என்பதினை உணர்ந்து நடத்தல் தமிழர் கடனாகும்.

தென்னாடு
செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு. சிவ. செந்தமிழாதன்,
ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
0715588737, aathan@thennadu.org



# கைகோர்ப்போம்!

தமிழர்களின் ஒப்பற்ற மெய்யியலான சைவசித்தாந்தத்தை இன்று நாம் ஆராய்ச்சி நோக்கில் கண்டு அதன் உயர்ந்த பொருண்மைகளை அடுத்து வரும் தலைமுறைகளுக்கும் சொல்ல வேண்டிய கடமைப்பாட்டுக்கு உரியவர்களாக இருக்கின்றோம். அறிவார்ந்த நம்முன்னோர்களால் கட்டியெழுப்பப்பட்ட எம் மெய்யியலை உயர்கல்வியாக புகட்டும் பல பல்கலைக்கழகங்களும் ஆதீனங்களும் அமைப்புக்களும் தமிழகத்தில் இருந்தாலும், இலங்கையில் இப்பணியை மிகச் சிறப்பாக முன்னெடுத்து வரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின், இந்து நாகரிக பீடத்தின், சைவ சித்தாந்த துறை என்றும் போற்றுதற்குரியது. அண்மைக்காலமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சைவசித்தாந்த துறை இணைய வழியாகவும், அரங்க வழியாகவும் முன்னெடுத்து வரும் விழாக்களும், குருபூசை நிகழ்வுகளும் போட்டிகளும் பயிற்சி வகுப்புக்களும் காலத்தின் தேவையை உணர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவ சித்தாந்த துறை செயற்படுகின்றது என்பதை எமக்கு புலப்படுத்துகின்றது. துறையின் தலைவர், கலாநிதி பொன்னுத்துரை சந்திரசேகரம் அவர்களும், துறையின் மூத்த விரிவுரையாளர்களும், மாணவர்களும் முன்னின்று உழைக்கும் பாங்கும், சைவ சித்தாந்த சிந்தனைகளோடு, சைவசித்தாந்தத்தைப் பரப்பிய அறிஞர் பெருமக்களையும் அருளாளர்களையும் நினைவு கூரும் பாங்கும் எம் சமய தத்துவம் குறித்த எதிர்கால நம்பிக்கை வெளிச்சத்தை எமக்கு காட்டுகிறது.

தமிழக இலங்கை உறவுப்பாலமாக இரு தேசத்து சித்தாந்த அறிஞர்களையும் ஒரே மேடையில் இணைப்பதும், ஆரோக்கியமான புலமைப்பரிமாற்றம் இடம்பெறுவதற்கான தளத்தினை அமைத்துக் கொடுப்பதற்கும் தென்னாடு செந்தமிழாகம சிவமடமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்த துறையும் இணைந்து முன்னெடுத்த, இனியும் முன்னெடுக்க இருக்கும் 'மார்கழிப் பெருவிழாவை' குறிப்பிடலாம்.

மார்கழிப் பெருவிழாவின் எழுச்சியினாலும், யாழ்ப்பாணத்து அறிஞர்களும் மக்களும் கொடுத்த வரவேற்பாலும் இன்னும் இன்னும் செயற்பட வேண்டிய கட்டாயமும் கடமையும் ஒருங்கே யாழ்ப்பாணப் பல்கலைகழக சைவசித்தாந்த துறைக்கு எழுந்துள்ளது. இதன் விளைவாகவே, அகில இலங்கை சைவமகாசபையுடன் இணைந்து சைவசித்தாந்த துறை இம்மாதம் 28 ஆம் திகதி முன்னெடுக்கும் திருமந்திர ஆன்மீக மாநாடு அமைகின்றது. ஈழத்து சைவ அறிஞர்களுடன் ஞானச் சிறப்பு மிக்க, அருணை பாலறாவாயன் ஐயா அவர்களும் தமிழகத்தில் இருந்து இங்கு வருகை தந்து இணைவது அற்புதமான நிகழ்வாகும்.

புலமைப் பாரம்பரியம் மிக்கவர்களினாலே இந்த மண்ணில் அறிவூட்டமான, ஆன்ம பலம் கொண்ட, சித்தாந்த தெளிவு பெற்ற இளைய தலைமுறை வளர்த்தெடுக்கப்பட்டால், சமுகப்பிறழ்வான நடத்தைகளைக் கொண்ட குழுக்கள் உருவாகாது போகும். ஒரு வளமான அமைதியான அறிவார்ந்த தேசம் எதிர்காலத்தில் முகிழ்க்கும்.

இப்பணியை செய்ய வேண்டிய நாமும், கல்விப்புலம் சார்ந்தவர்களும் முனைப்போடு செயற்பட முன்வரவேண்டும். யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் உயர்கல்வி மட்டத்தில் இப்பணியை செய்ய, இந்த மண்ணில் இயங்கும் ஒவ்வொரு பாடசாலைகளும் ஆன்மீக அடிப்படைகளையும் சைவசித்தாந்த அடிப்படைகளையும் மாணவர்களுக்கு புகட்டும் கைங்கரியங்களை சிறு அளவிலேனும் தினந்தோறும் முன்னெடுக்க வேண்டும். கணித விஞ்ஞான கணனி அறிவுக்கு மேலதிகமாக சைவ தத்துவ அறிவும் மாணவப்பருவத்திலேயே ஊட்டப்பட வேண்டும். தனித்தமிழ் வழிபாட்டின் உணர்வோடு இணைந்த சிறப்பையும் ஆகமச்சிறப்பையும் அவர்கள் அறியும் வகையில் நாம் செயற்பட வேண்டும்.

இங்கனம் பாடசாலைகளும் அதிபர்களும் ஆசிரியர்களும் செயற்பட விரும்பின் அவர்களுக்குத் துணை நிற்கவும் ஊட்டம் அளிக்கவும் தென்னாடு செந்தமிழாகம சிவமடம் என்றும் முன்னிற்கும். சிவமடத்தால் மார்கழி மாதம் 25 ஆம் நாள் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்த துறையுடன் இணைந்து முன்னெடுக்கப்பட விருக்கும் மார்கழிப்பெருவிழாவுக்கு மாணவர்களோடு பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் வருகைதரவேண்டும். உங்கள் வருகை தான் யாழ்ப்பாண சமுகம் இன்றும் சீர்வளர்சீர் ஆறுமுகநாவலர் அவர்கள் காட்டிய வழியில் நிற்கின்றது என்பதை பிறருக்கு உணர்த்தும்.

காலச் சூழலுக்கு ஏற்ப இணையவழியிலும், சமுக வலைத்தளங்களை ஊடகங்களாகவும் கொண்டு எல்லோரும் அறியும் வகையில் சைவசித்தாந்த கருத்தியலானது கலைகளினூடாகக் கடத்தப்பட வேண்டும். காணொளிப்பதிவுகள், சிறிய பிள்ளைகளுக்கு காட்சிப்படுத்தும் அசைவு இசைவு ஆக்கங்களில் கூட சித்தாந்த சிந்தனையை விதைக்க வேண்டும். எங்கனம் சீர்வளர்சீர் ஆறுமுகநாவலரவர்கள் பாலபாடத்திலும், சைவவினாவிடையிலும் சித்தாந்தக்கருத்துக்களை சீர்மையோடு புகுத்தினாரோ அங்கனம் இக்காலத்துக்கு ஏற்றது போல எம்மை நாம் தகவமைத்துக்கொள்ள வேண்டும்.

இதற்காகத் தனியார்கல்வி நிலையங்களை வெள்ளிக்கிழமைகளில் விடுமுறையாக்கி அறநெறிக்கல்வியின் மீள் எழுச்சிக்கு வித்திட்ட, யாழ் மாவட்ட அரச அதிபர், திரு.அ.சிவபாலசுந்தரன் அவர்கள் போற்றுதற்குரியவர். எனவே அரச நிர்வாகப்பீடத்தினரும், பாடசாலைத் தரப்பினரும், சைவ அமைப்புக்களும், பல்கலைக்கழகமும் ஓரணியாக நின்று சைவ தத்துவ வளர்ச்சிக்காகக் கை கோர்த்தால், காலம் எம் அடுத்த தலைமுறைக்கு பெரும் பரிசு ஒன்றைக் கையளிக்கும் என்பது திண்ணமே!

தென்னாடு
செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு.யாழவன் சிவவேதன்,
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (70) 770 1111, sivavethan@thennadu.org



# காலம் கடவுளாதமா?

'காலம்' என்ற சொல் தொன்று தொட்டு ஆராய்ச்சிக்கு உரிய சொல்லாகவே இருந்து வந்துள்ளது. காலத்தின் தேற்றத்திற்கான மர்மத்தை வெளிக்கொண்டு வருதலையே அறிவியல் தன் பிரதான தேடலாக கொண்டுள்ளது, காலத்தை நான்காவது பரிமாணமாகக் கொண்டு, விண்வெளியின் நிலைத்தோற்றத்தை வரையறுத்துள்ளது அறிவியல், விண்வெளி என்பது கிடை அச்சாக இருக்கும் போது, காலமென்பது நிலைக்குத்து அச்சாக இயங்குகிறது. என்பது அறிவியல் அறிஞர்கள் சிலரது கொள்கை இரண்டு அச்சுகளும் இடைவெட்டும் மையம் நிகழ்காலமாகவும், அந்த மையத்தில் இருந்து கால அச்சு மேல் நோக்கி செல்லும் போது எதிர்காலமாகவும், கீழ்நோக்கி அமையும் போது கடந்த காலமாகவும் கணிக்கப் பெற்றுள்ளது. அந்த வகையில் காலமே எல்லாவற்றையும் உருவாக்கி, உருவாக்கியவற்றை பேணி பின்னர் அழிப்பதால் காலமே கடவுள் என்பது பலருடைய கொள்கை.

சைவசித்தாந்த அடிப்படையில், காலமே கடவுள் என்பது சரியான வாதமா என்று பார்த்தால், இல்லை என்பதே பதிலாக அமைந்துள்ளது. காலம் என்பதன் பொருள் கலந்து நிற்பது. கடவுள் என்பதன் பொருள் கடந்தும் கலந்தும் நிற்பது. ஆகவே அடிப்படைப் பொருளில் கூட இரண்டு சொற்பதங்களும் வேறுபட்டே நிற்கின்றன. சிவஞானசித்தியார் காலமே கடவுள் எனும் கொள்கையினை சுபக்கத்தின் முப்பதாவது பாடலில் கண்டிக்கிறது

**"காலமே கடவுளாகக் கண்டனம் தொழிலுக்கு என்னின்
காலமோ அறிவு இன்று ஆகும். ஆயினும் காரியங்கள்
காலமே தரவே வேண்டும் காரணன் விதியினுக்கு
காலமும் கடவுள் ஏவலால் துணைக் காரணம் காண்"**

காலம் அறிவற்ற சடப்பொருள். சடமாகையினால் காலம் தானாக இயங்குவதில்லை. அதற்காக காலம் எவற்றையும் படைக்கவில்லையென்றோ, பேணவில்லை என்றோ, அழிக்கவில்லை என்றோ சொல்ல முடியாது, காலம் அவற்றைச் செய்கின்றது. அதனால் கடவுளின் ஏவலாலே தான் செய்கின்றது. அவ்வகையிலே அண்டத்தின் உருவாக்கத்தில் மாயை முதல் காரணமாகவும், காலம் துணைக்காரணமாகவும் இருக்க இறைவன் நிமித்த காரணனாக நின்று படைத்துக் காத்து, அழித்து மறைந்து அருள்கின்றான் என்பது சைவசித்தாந்த முடிபு

**"இறைவனே காலத்தை ஏவி ஐந்தொழில்களை நிகழ்த்துகின்றான்"** எனக்கூறிய சிவஞானசித்தியார் சுபக்கத்தின் நூற்று நாற்பத்தி நான்காவது பாடலில் எவ்வாறு காலத்தை ஏவுகின்றான் என விபரித்துள்ளார்.

**"மாயையில் காலமோடு நியதிபின் கலாதிதோன்றும்
ஆய அக்காலம் மூன்றாய் ஆக்கியும் அளித்தும் போக்கியும்
காயமோடு உலகுக்கு எல்லாம் காலசங்கையினைப் பண்ணி
நாயகன் அணையாலே நடந்திடும் சகத்தை எல்லாம்"**

மாயை என்கின்ற தத்துவத்தில் இருந்தே காலம் என்கின்ற தத்துவம் தோற்றம் பெறுவதாக சைவ சித்தாந்தம் பேசுகிறது. அந்தக் காலத்தின் துணை கொண்டு இறைவன் பலவற்றை நிகழ்த்துகின்றான் அண்டத்தின் முடிவுக் காலத்தில் காலம் மீண்டும் மாயையுள் ஒடுங்க, மாயை சத்தியுள் ஒடுங்க சத்தி சிவத்துள் ஒடுங்கியிறுக, இறைவன் தன் உண்மை நிலையில் அணு, காலம், அண்டம், சடம், வெளி, மற்றும் எவையெவை எல்லாம் உளவோ அவையவற்றை எல்லாம் கடந்து நிற்பான் என்பது சித்தாந்தம், எனவே இறைவனை காலம், வெளி போன்ற இழிபொருட்களாக நினைத்து வணங்காது அவற்றையும் தாண்டியுள்ளவன், எங்கள் சிற்றறிவுக்கு எட்டாத தன்மையன் என்பதை உணர்ந்து உய்வோமாக, இறைவன் காலனன்று, அவன் கால காலன்.

**"கால காலனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே"**

**திருச்சிற்றம்பலம்**

# தாய்மொழியாம் தமிழ்மொழியில் அர்ச்சனை

**சலம்பூவோடு தூபம் மறந்தறியேன்**
**தமிழோடிசை பாடல் மறந்தறியேன்**

**நால்வர் நெறி:**

**சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும்எம் சுந்தரனும்**
**சிற்கோல வாதவூர்த் தேசிகனும் - முற்கோலி**
**வந்திலரேல் நீறெங்கே! மாமறைநூல் தானெங்கே!**
**எந்தை பிரான் அஞ்செழுத்தெங்கே.**

என்னும் சிவானந்தமாலை வெண்பாவில் கூறியுள்ளபடி சங்க காலத்தை அடுத்து "நால்வர்" எனத் தொகைக் குறிப்பால் குறிப்பிடப்படுகின்ற அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் - என்னும் நால்வர் ஆசிரியர் தமிழ்நாட்டில் தோன்றித் தங்கள் அருட்பணியினை ஆற்றாதிருப்பின், சைவசமயம் மறைந்து, மறைந்த இடமும் புல் முளைத்துப் போயிருக்கும்.

சைவம் மட்டும் தானா? **"மாமறை நூல்"** எனப்படும் வேதப் பாடல்கள் தாம் தமிழ்நாட்டில் எங்கேனும் ஒலிக்குமோ? எங்கும் நாத்திகம் ஒன்றே நடம் புரியும். நால்வர் நற்றமிழ் பற்றி எளிமையாக எண்ணுவோர் யாவரும் இதனை ஆழச் சிந்தித்தல் வேண்டும்.

**மறுமுறை எழுச்சி:**

தமிழ் நாட்டில் திருக்கோயில் தமிழ் அருச்சனை பற்றிய கிளர்ச்சி சில ஆண்டுகட்கு முன் தோன்றிப் பின் அடங்கி விட்டது. ஆயினும் அது மறுமுறை எழுச்சியாக இப்பொழுது தோன்றியுள்ளது. அதுபற்றி மாறுபட்ட கருத்துக்களைப் பலர் வெளியிடுகின்றனர்.


**மறுப்புரைகள்:**

திருக்கோயில்களில் தமிழ் அருச்சனை நிகழ்த்துதலை மறுப்பவர்கள் **"கோயில் வழிபாட்டு முறைகள் அனைத்தும் ஆரிய மொழியில் உள்ள வேதம், ஆகமம் என்பவற்றில் சொல்லியுள்ளபடி ஆரிய மொழியிலேயே நிகழ்ந்து வருகின்றன. 'இம்முறை என்று தோன்றிற்று' என்று சொல்ல இயலாது. காலம் காலமாக நடைபெற்று வருவது இதனை மாற்ற முயல்வது தான்தோன்றித்தனமாக முடியும்"** என்கின்றனர்.

கால எல்லை அறிய இயலாமை பற்றியே ஒரு நிகழ்ச்சியை **"காலம் கடந்தது"** - என்று சொல்லி விட முடியாது.

உலகம் கடல், நிலம், மலை என்னும் பிரிவுகளை உடையது. ஆயினும் கடல் முதலியவைகளும் ஒரு காலத்தில் தோன்றியவை என்றே அறிஞர் கூறுவர். **"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே"** என்னும் **"வெண்பா மாலை வரி"** எல்லாம் ஒரு காலத்தில் தோன்றியவை தாம், என்பதைக் குறிப்பிடுகின்றது.

**"நிலம் உயிர்கள் வாழும் இடமாக மாற யதும் ஒரு காலத்தில் தான்"** என்பர் அறிவியலார். கால் எல்லை அறியப்படாதவற்றை 'தொன்மையானவை' எனக் கூறலாமே யன்றி 'காலத்தைக் கடந்தது' - எனக் கூற இயலாது.



**தருமை ஆதீனப் புலவர்**
**முதுபெரும் புலவர் சித்தாந்தக் கலைமணி திருமுறை உரைமணி திருநெறித் தமிழ்ச்சுடர் மகாவித்துவான் முனைவர் உயர்திரு. சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள்.**

**ஆரிய வழிபாடு:**

இனி, தமிழ் நாட்டுத் திருக்கோயில்களில் ஆரியமொழி வழிபாட்டு மொழி ஆனது ஒரு காலகட்டத்தில் தான் என்பதற்குத் திரிலோசன சிவாசாரியார் தம்முடைய சித்தாந்த சாராவளியில் கிரியா பாத முடிவில்,"ராஜேந்திர சோழன் என்னும் பெயருள்ள சோழராஜன் ஒருவன் பூமியாளும் காலத்தில் கங்காஸ்நானத்திற்குப் போன போது அவ்விடத்தில் சைவாசாரியார்களைக் கண்டு, ஸ்நானஞ் செய்து திரும்பி வரும்போது அந்த சைவாசாரியார்களை அழைத்துக்கொண்டு வந்து தன்னுடைய ராஜ்யத்தில் ஸ்தாபித்தான். அது முதல் காஞ்சி மண்டலத்திலும் சோழ மண்டலத்திலும் எங்கும் சைவ சம்பிரதாயம் விஸ்தாரமாயிற்று என்று அறிக" என்று கூறியிருப்பதே சான்றாக வல்லது.

**தமிழின் தொன்மை:**

ஆரியத்தை விடுத்துத் தமிழை ஆராயின், அதுவும் "தோற்றம் அறியப்படாத தொன்மையுடையதே" என்பதை மறுப்பார் ஒருவரும் இல்லை.

இனி வரலாற்றை நோக்கினால் "ஆரியம் இந்திய நாட்டில் ஒரு காலத்தில் நுழைந்த நுழைவு மொழியே" எனத் திட்டவட்டமாகச் சொல்லப்படுகின்றது. அது பற்றியே மனோன்மணீயம் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள்,

**"சதுமறை ஆரியம் வருமுன்**
**சகம்முழுதும் நினதாயின்,**
**முதுமொழி நீ அநாதி என**
**மொழிவதும்ஓர் வியப்பாமோ"**

என்று தெளிவுபெறப் பாடினார். அவரது கூற்றினை, **"உண்மைக்குப் புறம்பானது"** என விலக்குதல் இயலாது. ஏனெனில், அவரது கூற்றைக் கருத்தில் கொள்ளாமலே வேறு வகையில் அஃதாவது அகழ்வாராய்ச்சி முதலியவற்றால் இந்திய நாட்டின் முதற்கால நிலைபற்றி ஆராய்கின்ற ஆராய்ச்சியாளரது கூற்றுக்கள் தம் இயல்பிலேயே சுந்தரம் பிள்ளையவர்களது முடிவை வலியுறுத்துகின்றன.

**தெய்வமொழி:**

மேற்குறித்தபடி **"இந்திய நாட்டின் தெய்வப் பொதுமொழி ஆரியம்"** என்பது இன்று சிலரால் வலியுறுத்திக் கூறப்பட்ட போதிலும் சுந்தரம் பிள்ளையவர்களது கூற்றுப்படியும், ஆரியர் வருகைக்கு முன்பே தமிழர் உயரிய கடவுட்கொள்கை உடையவர்களாய் இருந்தனர் எனக்கூறும் ஆராய்ச்சியாளர் கூற்றுப்படியும் முதற் காலத்தில் தமிழே இந்திய நாட்டின் தெய்வ மொழியாகவும் விளங்கியிருந்தமை தெரியவருகின்றதன்றோ?

**வாழ்வியல் மொழி:**

ஆரியம் இந்திய நாட்டின் பொது மொழியாய் விளங்குதல் சமயத்துறையில் அல்லது வாழ்வியல் முறையில் அன்று. வாழ்வியலில் இந்திய நாட்டின் உட்பகுதிகள் பலவற்றிலும் வேறு வேறு மொழிகளே வழங்கின. அந்நிலையில் ஆரியம் இந்தியாவில் எந்த ஒரு பகுதிக்கும் வாழ்வியல் மொழியாக இருந்தமைக்குச் சான்றில்லை. அதற்குக் காரணம் ஆரியர்கள் பலப்பல காலகட்டங்களில் பல்வேறு வழிகளால் இந்தியாவிற்கு வந்து, பலப்பல இடங்களில் சிறுபான்மையராகவும் பெரும்பான்மையராகவும் குடியமர்ந்ததனால், அவ்விடத்து வழங்கிய மொழியையே தாங்களும் தங்கள் தாய்மொழி போலவே கொண்டு வழங்கி, வாழ்க்கையை நடத்தியதே. நாள் போகப்போக ஆரியருள்ளும் கல்வி முறையால் கற்றவர்கள் தவிர, ஏனையோர் ஆரியம் அறியாதவரேயாயினர். அதனால் ஆரியம் எந்த ஒரு உள்நாட்டிலும் வாழ்வியல் மொழியாய் வழங்கவில்லை. இதனையும் பேராசிரியர் சுந்தரம்பிள்ளையவர்கள்,

**"ஆரியம்போல் உலகவழக்கு**
**அழிந்தொழிந்து சிதையாஉன்**
**சீரிளமைத் திறம் நினைந்து**
**செயல்மறந்து வாழ்த்துதுமே"**

எனக் கூறினார். இதனால் ஆரியர் ஆரியம் தங்கள் மொழி எனக் கூறுதல் பழைய வரலாற்றைக் கொண்டன்றி. - இன்றுள்ள நடைமுறையைக் கொண்டன்று.

**திருச்சிற்றம்பலம்**

**தமிழ் அர்ச்சனை தொடரும்...**

**மூலம் : இலண்டன் சைவ மாநாடு சிறப்புமலர் 2004 - பக்கம் 47**

# சைவத்தை அறிமின் சிவத்தை அறிமின்

**தன்மாத்திரை என்பதன் பொருள் என்ன?**

தன்மாத்திரை என்றால் அதனளவில் அடங்கி இருப்பது எனலாம். தன்மாத்திரைகள் என்று குறிப்பிடப்படும் சத்தம், பரிசம் (ஓசை, ஊறு) போன்றவை நாம் அனுபவிக்கும் சத்தம் முதலியவற்றுள் அடங்கியிருப்பன. தன்மாத்திரை = தத் + மாத்திரை. தத் - அது; மாத்திரை - அளவு. தன்னளவில் உள்ளது தன்மாத்திரை.

தூலப் பொருட்களுக்கு சூக்குமப் பொருட்கள் மூலமாக அமைகின்றன. ஐம்பூதங்களுக்குத் தன்மாத்திரைகள் மூலமாக உள்ளன. மண், நீர், தீ, காற்று, வெளி ஆகியவற்றுக்கு முறையே நாற்றம், சுவை, ஒளி, ஊறு, ஓசை ஆகிய தன்மாத்திரைகள் மூலமாக அமைந்துள்ளன.

**நமது உடம்பின் அமைப்பில் தொடர்புடைய தத்துவங்கள் எவை?**

உடம்பு என்று கூறும் பொழுது எமக்குள்ள பரு உடம்பை விட நுண்ணுடம்புகளும் உள்ளன. தத்துவங்களில் சிவதத்தவங்கள் ஐந்தும் இவற்றில் தொடர்பு கொள்வதில்லை.

பூதங்கள் ஐந்தும் ஞானேந்திரிய கன்மேந்திரியங்கள் பத்தும் பரு உடம்பாக வருகின்றன. இதனைத் தூல சரீரம் என்றும் அன்னமய கோசம் என்றும் குறிப்பிடுவர். (கோசம் - உடம்பு) மனம், புத்தி, ஆங்காரம் மூன்றும் தன்மாத்திரைகள் ஐந்தும் சேர்ந்து சூக்கும சரீரம் அல்லது பிராணமய கோசம் எனப்படும். சித்தம் அல்லது பிரகிருதி குணசரீரம் அல்லது மனோமய கோசம். (சித்தமாய் நிற்பது பிரகிருதி). காலம், நியதி, கலை, வித்தை, அராகம் ஐந்தும் கஞ்சுக சரீரம் அல்லது விஞ்ஞானமய கோசம். (இந்த ஐந்தின் கூட்டு புருட தத்துவம்). வித்தியா தத்துவங்களில் ஒன்றான மாயை காரண சரீரம் அல்லது ஆனந்தமய கோசம். இவ்வாறு உடம்புகள் ஐந்தாக உள்ளன. இவற்றில் இறுதி மூன்று சரீரங்களையும் பர சரீரம் எனப் பெயரிட்டு, உடம்புகளை தூல சரீரம், சூக்கும சரீரம், பர சரீரம் எனச் சொல்லுதலும் உண்டு. பரசரீரம் என்பதற்கு அதிசூக்கும சரீரம் என்பது பொருள். தூல சரீரம் முதல் காரண சரீரம் வரை ஒன்றை விட ஒன்று நுண்ணியதாக இருக்கும்.

**தாத்துவீகம், மாயேயம் என்பன யாவை?**

பிரகிருதி மாயா தத்துவங்கள் இருபத்திநான்கின் தொடர்புடையவையும் அவற்றின் கூறுகளும், முக் குணங்களும், நால்வகை வாக்கும் தாத்துவிகம் எனப்படும். இவை அறுபதாகக் கொள்ளப்படுகின்றன. இந்த அறுபது தாத்துவிகங்களையும் முப்பத்தாறு தத்துவங்களுடன் சேர்த்து, தத்துவங்கள் தொண்ணூற்றாறு என்று கூறும் வழக்கமும் உண்டு.

மாயா காரியங்களான தத்துவங்ளை மாயேயம் என்று கூறுவதும் உண்டு.

**சிவனின் அருட்டிருமேனி**

**உயிர் எடுக்கும் உடல்கள் அல்லது வடிவங்கள் அது மாயையிலிருந்து இறையருளால் பெறப்படுகின்றன. இறைவன் எடுக்கும் வடிவங்கள் அப்படி அல்ல என்று கூறப்படுகின்றது. இதன் காரணம் என்ன?**

இறைவனுக்கு உடம்பு (உருவம்) உண்டானால், மாயையிலிருந்து தான் வரவேண்டும் என்று கொள்ளின், அவன் மாயையில் அகப்பட்டவன் என்ற நிலை தோன்றும். அத்துடன் அவனின் உடம்பைப் படைத்து அளிப்பவன் இன்னொருவன் இருக்கிறான் என்ற நிலையும் உண்டாகும்.

கடவுள் குறித்த இரண்டாம் அத்தியாயத்தில் கூறியவாறு, இறைவன் தன் நிலையில் உருவமற்று அருவமாக இருக்கிறான். இங்ஙனம் இருந்தால், அவனால் உயிர்களுக்கு எந்தப் பயனும் இல்லை. அவனைக் காணவேண்டும், கண்டு தொழவேண்டும், தொழுது அவனின் அருளைப் பெறவேண்டும் என்ற உயிர்களின் ஆர்வம் நிறைவேறாமல் போகும். எனவே உயிர்களுக்கு உதவுவதற்காக



இறைவன் உருவம் கொள்கிறான். அவன் கொள்ளும் உருவம் அருள் உருவம். அது மாயையிலிருந்து தோன்றியதல்ல. சிவஞான சித்தியார் என்ற சித்தாந்த நூலில் வரும் “அருள்உரு உயிருக்கென்றே ஆக்கினன்” என்ற தொடர் இதனை விளக்குவதாக உள்ளது.

**இறைவன் கூர்ம அவதாரம், கல்கி அவதாரம் போன்ற அவதாரங்கள் எடுத்ததாகக் கூறப்படுகிறது. இந்த அவதாரங்களில் அவன் ஒவ்வொரு உடம்பு எடுக்கிறான். சைவ சித்தாந்தம் இது பற்றி கூறுவதென்ன?**

இந்த அவதாரங்கள் சைவசமயத்தில் இல்லாதவை. இவை வேற்று மதங்களில் காணக்கூடியவை. கடவுள் தாயின் வயிற்றில் பிறப்பது என்பது சைவத்தில் இல்லை. சிவனைப் “பிறவா யாக்கைப் பெரியோன்” என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. “பெம்மான் முருகன் பிறவான் இறவான்” என்று கந்தரனுபூதி விளக்குகிறது. பிறப்பு இறப்பு இல்லாத, என்றுமுள்ள பரம் பொருள் அடியவர்களுக்கு உடம்போடு கூடி வந்து அருள்புரிவதை வரலாற்றில் காணலாம். மாணிக்கவாசக சுவாமிகளுக்கு குருவடிவாகி வந்து குருந்த மரத்தடியில் அருள்புரிந்த வரலாறுண்டு. இங்கே மாணிக்கவாசக சுவாமிகள் கண்ட வடிவம் சிவனின் அருள் திருமேனி. இது சிவன் எடுத்த அவதாரமல்ல.

**இறைவன் கொள்ளும் வடிவங்களில் மாயையின் தொடர்பு எதுவும் இல்லை என்று கூறமுடியுமா?**

உலகைச் செயற்படுத்தி நிற்கும் இறைவனுக்கு மாயா காரியமான சிவ தத்துவம் இடமாய் நிற்கிறது. இந்த வகையில் இறைவன் கொள்ளும் வடிவம் மாயையின் தொடர்புடையது எனக் கருதலாம். ஆனால் அவனின் வடிவம் மாயையாலானதன்று அது அருள் வடிவம்.

**சிவ தத்துவத்தை இடமாகக் கொண்டு இறைவன் கொள்ளும் வடிவங்களை விளக்குக.?**

தன்னிலையில் சிவனைப் பரசிவம் என்று அழைப்பதுண்டு. பரசிவம் உயிர்கள் மீது கருணை கொள்ளும் நிலையில் பராசத்தி எனப்படும். சுத்த மாயையில் உள்ள நாதம் முதலிய ஐந்து சிவ தத்துவங்களையும் தோற்றுவிப்பது பராசத்தியே. இத் தத்தவங்களில் நின்று சிவன் எடுக்கும் திருமேனிகள் உண்மையில் பராசத்தியை இடமாகக் கொண்டவை. இவை ஏழு திருமேனிகள். இந்த ஏழினோடு, தத்துவத் தொடர்பில்லாத பரசிவனையும் பராசத்தியையும் சேர்த்து சிவன் கொண்ட திருமேனி ஒன்பதாகக் கொள்ளப்படும்.

இத் திருமேனிகள் கொண்ட இறை பெயர்கள் முறையே பரசிவம், பராசத்தி, அபரசிவன் (நாதம்), அபரசத்தி (விந்து), சதாசிவன், மகேசுவரன், உருத்திரன், திருமால், நான்முகன் என்பனவாகும். தத்துவங்களைப் பொருந்தும் முறையில், நாதத்தில் அபரசிவனும், விந்துவில் அபரசத்தியும், சாதாக்கியத்தில் சதாசிவனும், ஈசுரத்தில் மகேசுவரனும், சுத்தவித்தையில் உருத்திரன், திருமால், நான்முகனும் பொருந்தி நிற்பர். பரசிவமும் பராசத்தியும் இத்தத்துவங்களைக் கடந்த நிலையில் உள்ளனர். உயிர்கள் உய்யும் பொருட்டு இறைவன் இந்த ஒன்பது நிலையில் நடிக்கிறான் என்று சித்தியார் கூறுகிறது. “நவந்தரு பேதமாக ஏக நாதனே நடிப்பன் என்பது சித்தியார்த் தொடர். சதாசிவன், மகேசுவரன், உருத்திரன், திருமால், நான்முகன் ஆகியோரின் சத்திகள் முறையே மனோன்மணி, மகேசுவரி, உமை, திருமகள், கலைமகள் ஆவர்.

**சிவனுக்கும் சத்திக்குமுள்ள உறவு என்ன?**

சூரியனிடத்தில் இயல்பாகவே ஒளி இருப்பது போல், சிவனிடத்தில் இயல்பாகவே சத்தி உள்ளது. சிவனின் தன்னிலையில் சத்தி அவனிடத்தில் ஒடுங்கி இருக்கும். உயிர்களுக்கு அருள் புரியும் நிலையில் அவனிடத்திலுள்ள சத்தி விரிந்து சிவனுக்குரிய வடிவங்களைப் பெறும். இவ்வடிவங்கள் சிவனின் கிருத்தியங்களுக்கு (செயற்பாட்டுக்கு) ஏற்ப அமையும். இவ்விரு நிலைகளிலும் சிவமும் சத்தியும் ஒன்றேதான். ஒன்றிலிருந்து ஒன்று பிரிவில்லாத சிவன் சத்தி உறவு தாதான்மிய உறவு (தாதான்மிய சம்பந்தம்) எனப்படும்.

**திருச்சிற்றம்பலம்**

**மூலம் - சைவ சித்தாந்த வினாவிடை (கலாநிதி க.கணேசலிங்கம்)**

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று – பெரிய புராணம்:

# திருத்தொண்டு நெறிவாழ உதித்த ஞானத்தவ முனிவர் திருநாவுக்கரசர்

**“திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்”**

### சம்பந்தர், அப்பருக்கு எம்பெருமானை காட்டல்

திருமறைக்காட்டில் திருக்கதவின் தடைகளை உடைத்து அற்புதம் நிகழ்த்திய அப்பரும், சம்பந்தரும் திருமடத்தைச் சேர்ந்தனர். நாயன்மாரிருவரும் திருமடத்தை அடைந்தபின் திருநாவுக்கரசு நாயனார், தான் திருப்பதிகம் முழுதும் பாடிய பின்னே திருக்கதவு திறந்த அருமையையும், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் முதற்பாட்டைப் பாடினவுடனே கதவு அடைந்த எளிமையையும் நினைந்து, “சுவாமியுடைய திருவுள்ளம் இதுவென்று அறிய மாட்டாமல் அயர்கின்றேன்” என்று கவன்று, மிக அஞ்சி திருமடத்திலே ஒரு பக்கத்திலே போய், வேதாரணியேசுரருடைய திருவடிகளைச் சிந்தித்துக்கொண்டு அருநித்திரை செய்தார்.

எம்பெருமான் அவரிடத்தில் தோன்றி, **“நாம் திருவாய்மூரில் இருப்போம். அங்குத் தொடர்ந்து வா!”** எனத் திருவாய் மலர்ந் தருளினார். நாவரசரும் **“என்னை அங்கே வா என்று சொல்லிச் சென்றார். அஃது என்னவோ!”** என்ற கருத்துக் கொண்ட திருக்குறுந்தொகைப் பதிகம் பாடி ‘இதுவே எம்பெருமானின் அருளாக அமையுமாயின் அவ்வாணையின் படியே நானும் போவேன்!’ என்று துணிந்து எழுந்து, திருமறைக்காடு புறகிடுமாறு விரைவாகச் சென்றார். பெருமான் முன்னே செல்ல, நெடுந்தொலைவு பின்னே தொடர்ந்து நவரசரும் சென்றார். சிவபெருமான், அருகில் காட்சி தருபவர் போல் பொன்மயமான திருக்கோயில் ஒன்றை அவருக்கு முன்னதாகத் தோற்றுவித்து, அதற்குள் புகுந்தருளினார். அவரை அடைய நெருங்கி வரும் நாவரசர் விரைவாக அவரைத் தொடரவும் இவ்வாறு அவர் சென்றதை ஞானசம்பந்தரும் கேட்டு அங்கு வந்து சேர்ந்தார்.

அப்பமூர்த்தி சுவாமி மறைந்தமையைக் குறித்துத் துக்கித்து, அடியார்களில் சிறந்த திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரே திறக்கவேண்டும் என்பதை நினையாமல் திறந்து குற்றஞ்செய்த சிறியேனுக்கு ஒளிக்கலாம். ஒரு திருப்பதிகத்தின் முதற்பாட்டாலேயே திருக்கதவை அடைப்பித்த திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் இங்கே வந்திருக்கின்றார். அவருக்கு எப்படி ஒளிக்கலாம் என்றார். உடனே எம்பெருமான் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருக்குக் காட்சி கொடுத்தருளினார். அக்கூத்தைப் பிள்ளையார் பார்த்துப் பணிந்து, துதித்து, நாவுக்கரசரும் காணுமாறு காட்டியருளுதலும், நாவரசர் கண்டு பின்வரும் திருப்பதிகம் பாடினார்.



**பாட அடியார் பரவக் கண்டேன்
பத்தர் கணங்கண்டேன் மொய்த்த பூதம்
ஆடல் முழவம் அதிரக் கண்டேன்
அங்கை அனல்கண்டேன் கங்கை யாளைக்
கோட லரவார் சடையிற் கண்டேன்
கொக்கி னிதழ்கண்டேன் கொன்றை கண்டேன்
வாடல் தலையொன்று கையிற் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே**

எம்பெருமானும் அத்திருப்பதிகத்தை ஏற்றுக்கொண்டு எழுந்தருள் நாயன்மாரிருவரும் திருவாய்மூரை அடைந்து, இறைவனை வழிபட்டுக்கொண்டு, சிலநாள் அங்கிருந்த பின் திருமறைக்கட்டிற்குத் திரும்பி வந்து, அங்கே தங்கியிருந்தார்கள்.

இருக்குநாளிலே, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் மதுரையில் இருக்கின்ற பாண்டியனுடைய மனைவியாராகிய மங்கையர்க்கரசியாரும் மந்திரியாராகிய குலச்சிறை நாயனாரும் அனுப்பிய தூதர்களாலே பாண்டியநாட்டிலே அந்த சமயம் சைவம் குன்றிய விடயத்தை கேள்வியுற்று, சமணர்களை வென்று சைவத்தை நிலைப்படுத்தும் பொருட்டு, அவ்விடத்திற்குச் செல்ல எழுந்தார். அப்பொழுது திருநாவுக்கரசுநாயனார் சமணர்களுடைய கொடுமையை நினைந்து, மதுரைக்குப் போகாதிருக்கும் படி சம்பந்தரை தடுத்தார். நாவரசர் இவ்வாறு கூறக்கேட்ட ஞானசம்பந்தர், **“அளவில்லாத பெருமை பொருந்திய திருநீற்றைப் போற்றுகின்ற அவ்விரு பெருமக்களையும் அங்குச் சென்று காணும் கருத்துடையேன். அத்தீமைகளைச் செய்கின்ற சமணர்களின் நிலைமையை அழிவித்துச் சைவ நெறியை வளர்த்தன்றி வேறு ஒரு செயல் செய்ய மாட்டேன்! உம் ஆணை!”** என்று அருளிச் செய்தவராய், பாண்டி நாட்டுக்கு எழுந்தருளினார்.




### அப்பர் பெருமான் பழையறைக்கு எழுந்தருளல்

சீகாழித் தலைவரான ஞானசம்பந்தர் அந்நிலையில் பாண்டி நாட்டிற்கு எழுந்தருளவே, அவரிடம் விடை கொண்டு அங்குத் தங்கியிருந்த திருநாவுக்கரசரும், தாம் கொண்ட அன்பினால் திருமறைக்காட்டில் வீற்றிருக்கும் இறைவனை சிலநாள் வணங்கிப் போற்றி செய்து, அங்கிருந்தும் புறப்பட்டுச் செல்வாராகித் திருவீழிமிழலையில் வீற்றிருக்கும் சிவபெருமானின் சிறந்த திருவடிகளை அடைந்தார்.

திருவீழிமிழலையை அடைந்த நாவரசர், அப்பதியின் புறத்திருந்தவாறே வணங்கிச் சென்று, மறையின் முதல்வரான சிவபெருமான் வீற்றிருக்கும் அனைத்து கோயில்களையும் வணங்க எண்ணி, இவ்வுலகத்தில் விளங்கும், நீரையுடைய காவிரியாற்றின் கரை வழியாய்ச் சென்று, பல பதிகளையும் வணங்கினார். அச்சசமயம் திருவாவடுதுறை இறைவரின் திருவடிகளைச் சேர்ந்து வணங்கி, ஞான அமுதுண்ட காழிப்பெருமானுக்கு அவரது பாடலுக்காக அங்கே இறைவர் ஆயிரம் பொற்காசுகளை வழங்கியருளிய திறத்தை வைத்துப் போற்றி “மாயிருஞாலமெல்லாம்” எனும் திருப்பதிகம் பாடி, அங்கிருந்து புறப்பட்டுப் பிற பதிகளையும் வணங்கிச் செல்லலானார். அவ்வழியாக வந்து பழையறையை அடைந்தார்.

**திருச்சிற்றம்பலம்**

**திருநாவுக்கரச நாயனார் புராணம் (274 - 294)**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு பெரியநாயகி உடனுறை பழமலைநாதர் [விருத்தகிரீசுவரர்] திருக்கோயில் - திருமுதுகுன்றம் [விருத்தாச்சலம்]

## [தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 220 ஆவது திருக்கோயில் திருமுதுகுன்றம் [விருத்தாச்சலம்]]



**"நின்று முதுகுன்றை, நன்று சம்பந்தன்
ஒன்றும் உரைவல்லார், என்றும் உயர்வாரே."**

தூசினால் அம்மை வீசத் தொடையின்மேற் கிடத்தித் துஞ்சும் மாசிலா உயிர்கட்கெல்லாம் அஞ்செழுத்தியல்பு கூறி ஈசனே தனது கோலம் ஈந்திடும் இயல்பால், இங்கு இறப்பவர்களுக்கு அந்த காசியினை விட மேன்மையான முத்தியை (சாரூப நிலை) தரும் அற்புத தலமே அருள்மிகு பெரியநாயகி உடனுறை பழமலைநாதர் திருக்கோயில்.

**அமைவிடம்: கடலூர் மாவட்டம், தமிழ்நாடு**

இன்று விருத்தாசலம் என்று வழங்கப்படுகிறது. விழுப்புரம் - திருச்சி இரயில் பாதையில் உள்ள முக்கிய இரயில் நிலையமாகும். நிலையத்திலிருந்து 2 - கி. மீ. தூரத்தில் இக்கோவில் உள்ளது. தமிழகத்தின் அனைத்து முக்கிய நகரங்களிலிருந்தும் பேருந்து வசதி உள்ளது.

**இறைவர் திருப்பெயர்:** பழமலைநாதர், விருத்தகிரீசுவரர்.
**இறைவியார் திருப்பெயர்:** பெரிய நாயகி, பாலாம்பிகை, விருத்தாம்பிகை.
**கோயில் மரம்:** வன்னி மரம்
**தீர்த்தம்:** நித்யானந்தகூபம், மணிமுத்தாறு, அக்னி, குபேர, சக்கர தீர்த்தங்கள்.
**வழிபட்டோர்:** முருகப்பெருமான், விபச்சித்து முனிவர், உரோமேச முனிவர், சுக்கிராசாரியார், யாக்ஞவல்க்கிய முனிவர், சிகண்டி, கோசிகன், விதர்க்கண செட்டி, குபேரன் தங்கை, சம்பந்தர், அப்பர், சுந்தரர், சுவேத மன்னர், நாதசர்மா, அநவர்த்தினி, பட்டினத்துப் பிள்ளையார், சேக்கிழார், பிரமன், அகத்தியர், குருநமசிவாயர், சிவப்பிரகாசர், இராமலிங்க வள்ளலார் முதலியோர்.
**பாமாலை:** சம்பந்தர், அப்பர், சுந்தரர்.

### திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்

**திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம்**

மத்தாவரை நிறுவிக்கடல் கடைந்தவ்விட முண்ட
தொத்தார்தரு மணிநீண்முடிச் சுடர்வண்ணன திடமாம்
கொத்தார்மலர் குளிர்சந்தகி லொளிர்குங்குமங் கொண்டு
முத்தாறுவந் தடிவீழ்தரு முதுகுன்றடை வோமே. (1-12)

**அப்பர் பெருமான் அருளிய திருப்பதிகம்**

கருமணியைக் கனகத்தின் குன்றொப் பானைக்
கருதுவார்க் காற்ற எளியான் தன்னைக்
குருமணியைக் கோளரவொன் றாட்டு வானைக்
கொல்வேங்கை யதளானைக் கோவ ணன்னை
அருமணியை அடைந்தவர்கட் கமுதொப் பானை
ஆனஞ்சும் ஆடியைநான் அபயம் புக்க
திருமணியைத் திருமுதுகுன் றுடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்த வாறே. (6-68)

**சுந்தர மூர்த்தி நாயனார் அருளிய திருப்பதிகம்**


பொன்செய்த மேனியினீர் புலித்
தோலை அரைக்கசைத்தீர்
முன்செய்த மூவெயிலும் மெரித்
தீர்முது குன்றமர்ந்தீர்
மின்செய்த நுண்ணிடையாள் பர
வையிவள் தன்முகப்பே
என்செய்த வாறடிகேள் அடி
யேன்இட் டளங்கெடவே. (7-25)

### திருத்தலச் சிறப்பு

சிவபெருமானால் முதலில் (ஆதியில்) படைக்கப்பெற்றது. எனவே, முதுகுன்றம் எனப்படுகிறது. ஆதியில் நான்முகன் இந்த மண்ணுலகைப் படைக்க விரும்பியபோது சிவபெருமானை துதிக்க அவரும் அருள் செய்தார். பின்னர் தானே ஒரு மலையாகத் தோன்றினார். அதன் பின்னரே நான்முகன் படைத்த மலைகளும் தோன்றின. இந்த மலைகளுக்கெல்லாம் சிவபெருமான் மலையாகத் தோன்றிய மலையே முன்னால் தோன்றியது என்பதால் இது பழமலை என்றும் இத்தலத்து இறைவன் பழமலைநாதர் என்றும் வழங்கப்படுகிறார். நான்முகனும் அகத்தியரும் வழிபட்ட பெருமையுடைய பதி. இங்கு இறப்பவர்களுக்கெல்லாம் உமாதேவியார் தமது ஆடையால் வீசி இளைப்பாற்ற, இறைவன் அவர்களுக்கு ஐந்தெழுத்தை உபதேசித்துத், தமது உருவமாக்கும் (சாரூப நிலை) திருப்பதி. ஆதலால், இது காசியினும் மேம்பட்டதாகும்.

சம்பந்தர் இத் தலத்தை அடையும்போதும், வலஞ் செய்தபோதும், வழிபட்டபோதும் தனித்தனிப் பதிகங்கள் பாடியருளப்பெற்ற பெருமையுடையது. சுந்தரர், இறைவனைப் பாடிப் பன்னீராயிரம் பொன்பெற்று அவற்றை மணிமுத்தாறு நதியிலிட்டு, திருவாரூர் கமலாயக் குளத்தில் பெற்றார். இத்தலத்திற்கு "விருத்த காசி" என்றும் பெயருண்டு. பண்டை நாளில் இத்தலத்துள்ளோர் காசிக்குச் செல்வதில்லை என்ற மரபு இருந்ததாகத் தெரிகின்றது. இங்கு வாழ்ந்து சாரூப நிலையடைந்த நாதசர்மா, அநவர்த்தினி ஆகியோரின் பெயர்களில் அமைந்த கோயில்களும் உள்ளன.

குமாரதேவர் பாடியுள்ள பெரியநாயகியம்மன் பதிகமும் குருநமசிவாயர் பாடியுள்ள சோத்திரக்கோவையும் வள்ளற் பெருமானின் குருதரிசனப் பதிகமும் சொக்கலிங்க அடிகளார் என்பவர் (19-ஆம் நூற்றாண்டு) எழுதிய பெரிய நாயகி பிள்ளைத் தமிழும் இத்தலத்திற்கு உள்ளன. சிவப்பிரகாச சுவாமிகள் பழமலையந்தாதி, பெரியநாயகியம்மை விருத்தம், பெரிய நாயகியம்மை கட்டளைக் கலித்துறை, பிக்ஷாடன நவமணிமாலை முதலிய நூல்களைப் பாடியுள்ளார்கள். 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஞானக்கூத்தர் என்பவர் திருமுதுகுன்றத் தல புராணத்தைத் தமிழில் பாடியுள்ளார்.



### திருத்தல வரலாறு

இத்தலத்தின் தல விருட்சமான வன்னிமரம் சுமார் 3000 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. ஆதி காலத்தில் இக்கோயிலுக்கு திருப்பணி செய்த விபசித்து முனிவர் திருப்பணி வேலை செய்தவர்களுக்கு இந்த வன்னிமரத்தின் இலைகளைப் பறித்து கூலியாக கொடுத்தார் என்றும் அவை அத்தொழிலாளர்களின் உழைப்புக்கேற்ப பொற்காசுகளாக மாறியது என்று தலபுராணம் கூறுகிறது.

### திருக்கோயில் அமைப்பு

வடக்குக்கோபுரத்திற்கு நேர் வடக்கேயுள்ள மணிமுத்தாற்றுப் பகுதிக்குப் புண்ணியமடு என்று பெயர். இங்கே தான் இறந்தவர்களின் எலும்புகளை இட்டு முழுகுவது வழக்கம். இங்கே ஆழத்துப் பிள்ளையார் என்பது தலவிநாயகர் திருப்பெயர். முதல் வீதிக்குக் கைலாச வீதி என்று பெயர். இந்த வீதியில் வடமேற்குமூலையில் இருபத்தெட்டு ஆகமக் கோயில் உள்ளது. அம்மை திருமுக மண்டலம் கிழக்குநோக்கியது. அம்மையின் திருநாமம் வட மொழியில் விருத்தாம்பிகை. சுவாமி பெயர் விருத்தகிரீசர். கற்பக மரமே வன்னி மரமாக வந்து பழமலை நாதர் திருக்கோயில் திருப்பணியைச் செய்ததாக வரலாறு.



எழுந்தருளல் மூர்த்தி நாமம் பெரியநாயகர். இவர் ஆண்டிற்கு ஒருமுறை மாசிமக விழாவில் ஆறாந் திருநாள் மட்டுமே எழுந்தருளிக் காட்சி வழங்குவார். இந்தக்கோயில் மிக முக்கிய சிறப்பு ஐந்து என்கிற எண்ணாகும். இந்த கோயிலில் ஐந்து கோபுரம், ஐந்து நந்தி, ஐந்து தேர், ஐந்து கொடிமரம் என எல்லாமே ஐந்து ஐந்தாக அமைந்துள்ளது.

சோழர்கள், காடவர், பாண்டியர், விஜய நகரத்தார் மற்றும் குறுநில மன்னர்கள் ஆகியோரது கல்வெட்டுகள் மொத்தம் 74 உள்ளது. இக்கல்வெட்டுக்களிலிருந்து வேதமோதவும், புராணம் படிக்கவும், திருமுறைப் பாராயணம் செய்யவும், பணியாளர்கட்குத் தரவும், நந்தவனம் வைக்கவும் நிலமும் பொன்னும் பொருளும் நெல்லும் கொடுத்த செய்திகள் அறியக்கிடக்கின்றன. வாங்கிய கடனைத் திருப்பித்தராத ஒருவனுக்குத் தண்டனையாக கோயில் விளக்கிடுமாறு பணித்த செய்தியொன்றும் ஒரு கல்வெட்டால் தெரிய வருகிறது. பல்லவ மன்னனான கோப்பெருஞ்சிங்கன் என்பவன், தான் போர்க் களத்தில் பலரைக் கொன்ற பழி நீங்குவதற்காகப் பழமலைநாதருக்கு வைரமுடி ஒன்று செய்துதந்து அதற்கு அவனியாளப் பிறந்தான் என்று பெயரும் சூட்டினான் என்பதும் மற்றொரு கல்வெட்டுச் செய்தியாகும்.

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**

# சிவபூமியில் சிவனைத் தேடி

## 12ம் நூற்றாண்டில் சோழராட்சியில் சிறப்புப் பெற்ற சிவன் கோயில் விக்கிரம சலாமேக ஈசுவரம்



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

குருணாகல் - புத்தளம் வீதியிலிருந்து ஒரு மைல் தூரத்தில் புதுமுத்தாவ என்னும் ஊர் அமைந்துள்ளது. அவ்வூரின் அருகே ஒரு பெருங்குளம் அமைந்துள்ளது. அவ்வூரையும் குளத்தையும் அந்நாளில் மாகல, மாகலவாவி என்னும் பெயர்களால் அழைத்துள்ளனர். பின் 12ஆம் நூற்றாண்டில் 1ஆம் பராக்கிரமபாகுவினால் இக் குளம் திருத்தி அமைக்கப்பட்டு, நீர்ப்பாசன வசதிகளும், விவசாயமும், போக்குவரத்துப் பாதையுமாக மாகல் படிப்படியாக விருத்தி கண்டது. அவனுடைய ஆட்சிக் காலத்தில் திருத்தியமைக்கப்பட்ட குளம் மாகலவாவி என்று அழைக்கப்பட்டது.

சோழர்கள் இலங்கையில் ஆதிக்கம் செலுத்திய கால கட்டத்தில் மாகலில் படைத்தளம் அமைத்திருந்தனர். பொலன்நறுவையில் பதவியா நகரில் சோழராதிக்கத்தில் ஐந்நூற்றுவரின் வணிககணம் ஒன்று எவ்வாறு உருவாகி செல்வாக்குப் பெற்றதோ அதே போல மாகலிலும் அவ் வணிக கணம் ஒன்று உருவாகி செல்வாக்குப் பெற்றிருந்தது என்பதனை அங்குள்ள சாசனங்களாலும் பிற தொல்பொருட்சின்னங்களாலும் அறியமுடிகிறது.

### ரஜமகாவிகாரையும் புராதனமான சைவக்கோயிலும்

கி.பி 17 ஆம் நூற்றாண்டிலே ரஜமகாவிகாரை அமைக்கப்பட்ட போது. அங்கு மிகப்புராதனமான சைவக்கோயில் இருந்தமைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. சைவக் கோயிலின் கட்டட உதிரிப்பாகங்கள் இவ்விகாரையின் கட்டடத்தில் ஆங்காங்கு காணப்படுகின்றது. குறிப்பாக விகாரையின் பிரதிமாகரத்தின் சுவர் ஒன்றிலே சிவலிங்கம் ஒன்று காணப்படுகின்றது. விகாரையின் பின்புற மண்டபத்தில் நடப்பட்ட தூண் ஒன்றில் 12ஆம் நூற்றாண்டில் பொறிக்கப்பெற்ற தமிழ்க் கல்வெட்டொன்றும் காணப்படுகின்றது. அவை, 1ஆம் பராக்கிரமபாகுவின் தந்தையான மானாபரணனின் காலத்தவை என்று கணிக்கப்படுகின்றது.

### வணிககுலமும்- விக்கிரம சலா மேகபுரமும்

மாகலானது 12ஆம் நூற்றாண்டிலே ஒரு நகரமாகிப் புனர்நாமம் பெற்று விளங்கியதை பல சாசனச் சான்றுகள் வாயிலாக உணர்ந்து கொள்ளலாம். ரஜமகாவிகாரையில் காணப்படும் அரசமரத்தின் கீழ் நீள்சதுரவடிவமான கல் ஒன்றிலே தமிழ் எழுத்துகளான வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது. அக்கல் தற்போது இவ் விகாரையின் சுவரின் பாகமாக அமைத்துள்ளனர். இச் சாசனத்தை 1997 ஆம் ஆண்டு இனம் கண்டு ஆராய்ந்த ஈழத்து வரலாற்றுப் பெருந்தகையான சி. பத்மநாதன் அவர்களும், ஜப்பானியப் பேராசிரியர் நொவொரு காறஷீமா அவர்களுக்கும் இவ்வாசகத்தைப் படியெடுத்து, இது ஐந்நூற்றுவரின் மெய்க்கீர்த்தி என்றும், அவ்வணிக கணத்தால் உருவாக்கப்பட்ட நகரமே விக்கிரம சலா மேகபுரம் என்றும் அறுதியிட்டு கூறினார். அது மட்டுமன்றி ஐந்நூற்றுவரின் வணிக குலத் தெய்வமாக ஐய்யப் பொழில்புர பரமேஸ்வரி திகழ்ந்தாள் என்ற செய்தியும் கீழ்வரும் சாசன வரியினுள் குறிப்பிட்டுள்ளது.

**“ஸ்வஸ்தி ஸ்ரீ, ஸமஸ்த புவநாஸ்ரய**
**பஞ்சஸத வீரசாஸத லக்ஷமீலங்க்ரித**



**வசஷஸ்தல (புவன பராக்ரம) ஸ்ரீ வாசுதேவ**
**கண்டளி மூலபத்த்ரோத்பவ.......**
**ஸ்ரீ ஐய்யப் பொழிற்புர பரமேஸ்வரிக்கு**
**மக்களாகிய மாகலான விக்கிரம**
**சலோ மேகபுரத்துப் பெருமக்கள்...”**

இச் சாசனம் விக்கிரமசாலா மேகபுரம் பற்றிய செய்தியைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. இங்குள்ள பெருமக்கள் அந்நகரத்தின் ஆளுங் கணத்தவர்கள் என்பது ஊகிக்கப்படுகின்றது. விக்கிரம சலா மேகபுரம் சுயாட்சியுரிமை பெற்ற நகரம் என்பது இதனால் தெரிய வருகின்றது. இதனாலேயே நகரத்துப் பொருட்களை **“ஐய்யப் பொழில்புர பரமேஸ்வரிக்கு மக்களாகிய”** வரென்று சாசனம் குறிப்பிடுவதால், அப் பெருமக்களை வணிக கணத்தைச் சேர்ந்தவர்கள் என்பது உணரப்படும் என்று பேராசியரியர் சி. பத்மநாதன் இலங்கையில் இந்துசமயம் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். எனவே வணிக நகரமான மாகல் பின்னாளில் விக்கிரம சலாமேகபுர புதிய பெயர்களையும் சேர்த்துப் பேசுவது வழக்கமானது உதாரணமாக மாதோட்ட நன்னகர் பின்நாளில் ராஜராஜபுரம், புலைய மங்கலம் என்றும் பேசப்பட்டதைக் குறிப்பிடலாம்.

### விக்கிரம சலாமேக ஈசுவரம்

விக்கிரமசலாமேகபுரம் எனும் வணிக நகரத்தில் அமையப்பெற்ற சிவன் கோயில் ஆகையால் விக்கிரம சலா ஈசுவரம் என்ற திருநாமத்தைப் பெற்றுள்ளது. இக்கோயில் மானாபரணின் காலத்தில் செல்வாக்குப்பெற்ற கோயிலாக இருக்கலாம். மானாபரணின் தேவியான சுந்தமல்லி இக்கோயிலுக்கு தானங்கள் கொடுத்த வரலாறும் பேசப்படுகின்றது. அச்சாசனம் மேல்வருமாறு இராஜ மகாவிகாரை மண்டபத் தூணில் பொறிக்கப்பட்டுள்ளது. இத்தூண் முன்பு விக்கிரமசலா மேகபுரத்து ஈசுவரன் கோயிலின் மண்டபத் தூண்களாய் இருந்தவைகளாகும்.

**“ஸ்ரீஜயபாகு தேவர்க்கு யாண்டு எட்டாவது**
**பாண்டியனார் வீரப்பெருமாள்**
**நம்பிராட்டியார் கொலோத்துங்க**
**சோழதேவர் திருமளார் சுந்த மல்லியாழ்வார்**
**மாகலான விக்கிரம சலா மேகபுரத்து**
**விக்கிரம சலோமேக ஈஸ்வரம் உடையார்க்கு**
**சந்திராதித்தவற் நின்றெரிய இட்ட**
**திருந்தா விளக்கொன்றுக்குயிட்ட**
**காசு பத்து, மூன்று சான் நீளத்**
**தரா நிலை விளக்கு ஒன்று”**

இத் தூண் சாசனத்தின் படி சுத்தமல்லி அரசியார் இந்நகரத்தில் அமைந்த சிவன் கோயிலிற்கு தினமும் நின்று கொண்டு எரிவதற்கு நந்தா விளக்கு ஒன்றினையும், பத்துக் காசினையும், மூன்று சாண் நீளமான தாராநிலை விளக்கொன்றினையும் தானமாக வழங்கினாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு அரசகுடும்பத்தாரின். கவனத்தையும், மதிப்பையும் பெற்ற கோயிலாக விளங்கியுள்ளது. இச்சாசனம் ஏறத்தாள 12ம் நூற்றாண்டுக்குரியதாகக் கணிக்கப்பெற்றுள்ளது. ஆதலால் சோழராட்சிக் காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த கோயிலாகவும் விளங்கியுள்ளது.

மற்றுமொரு மண்டபத்தூண் ஒன்றிலே மாகலில் கம்மாளருக்கும் வண்ணாருக்கும் இடையில், கம்மாளரின் ஈமச்சடங்கு புரிவதற்கு வண்ணார் உடன்படாமையால் ஒரு தகராறு ஏற்பட்ட சமயத்தில் வீரபாகு என்றும் பட்டப் பெயர் கொண்ட மானாபரணனின் பஞ்சபிரதானிகள் என்னும் உயர் அதிகாரிககள் இத்தகராரை விசாரித்து, அவர்களுக்கு வழங்கிய தீர்ப்பின் வாசகத்தை அரச ஆணையாகச் சிலாசானஞ் செய்து விக்கிரமசலாமேக ஈசுவரத்திலுள்ள தூணில் பொறித்து வைத்துள்ளனர். அச்சாசனத்தின் பகுதி ஒன்று மேல்வருமாறு அமைந்துள்ளது.

**“ஸ்வஸ்தி ஸ்ரீ: அபைய சலாமேக சக்கரவர்த்திகள் ஸ்ரீ ஜயபாகு தேவற்கு யாண்டு**
**எட்டாவது பங்குனி முன்நாலாம் பக்கம்**
**ஸ்ரீ வீரபாகுதேவர் பஞ்ச பிரதானிகள்**
**பூர்வாசாரம் விசாரணை பண்ணிக் கம்மாளருக்குக் கோட்ட சளுவும் பாவாடையும் முகத்தீடும்**
**ஏறுகைக்குகக் காரணங் கண்டு, .........**
**நாயனார் ஸ்ரீ வீரபாகு தேவர் எழுத்து**
**யுகாந்திரம் அளவும் நிற்பதாக அருளி**
**இக் கல்லு வெட்டுவிச்சேன்.......”**

இச்சாசனத்தின்படி விக்கிரமசலா மேகபுரத்தில் கம்மாளர், வண்ணார், அரச அதிகாரிகளான பஞ்சப்பிரதானிகள் வாழ்ந்துள்ளனர். இன்னும் சில சாசனங்களில் வீரக்கொடி, லோகப் பெருஞ் செட்டியார், வீரமாகாளர், வைஸ்ராவணர் போன்றோர்களும் இவ்வணிக நகரத்தில் வாழ்ந்திருந்தமை குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே ஈசுவரன் கோயிலோடு வணிகர்களும், பிரதானிகளும், குலமக்களும் தொடர்பில் இருந்துள்ளனர். அவர்களின் ஆதரவுகள் அக்காலச் சமய கலாசார நடவடிக்கைகளோடு பிணைந்திருந்தமையும் தெரிய வருகின்றது.

சோழராட்சிக் காலத்தில் மாகலான விக்கிரம சலா மேகபுரம் ஒரு வணிகநகரமாக மட்டுமன்றி, சோழரின் படைத்தளமாகவும் விளங்கியதோடு, சைவக்கோயில், அம்மன் கோயில், செட்டியாகிய முருகன் கோயில் என்பனவற்றுடன் பௌத்த பள்ளியும் அருகருகில் அமைந்து, அச்சமய மரபுகளிடையே நெருக்கமான தொடர்புகளும் ஆரோக்கியமாக ஏற்பட்டிருந்தன.

(இக்கோயில் சான்றுகளுக்கான படங்கள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.)

**“மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”**

**திருச்சிற்றம்பலம்**




**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org



# Sydney Murugan Temple

Sydney Murugan Temple is a place of worship dedicated towards the tamil god of Murgan, strategically located on the Great Western Highway in Mays Hill. This enormous temple fills with devotees on a daily basis, and provides them with a easy way to worship God. It also hosts thousands of devotees for numerous festivals throughout the year such as Sivaratri, Kandasasthi, Navaratri and many more. This temple acts as an enduring symbol of Tamil and Saivam culture that stands tall amongst the sycrapers of Sydney's West. It stands as a testament to the greatness of ancient Tamil architecture, a sacred monument that pays homage to the timeless tradition of devotion and heritage. We are lucky to be able to experience this ever important temple. However, it's essential to acknowledge that prior to its construction in 1999, the Sydney Murugan Temple was nothing but a vision. A vision that was initiated and built by a dedicated team of devotees, whom we owe huge gratitude, for having built a temple to be experienced by multiple generations.

The temple was envisioned with the several objectives by the founding members that it continues to live by today. The Saiva Manram (the temple's registered name) objectives were to promoe the saiva religious faith as based on the Tamil langauge scriptures such as the authoritative scriptures of the Tamil Nayanmars. The temple was not built in a day and required arduous efforts from many to obtain approvals and create constitutions. However, determination and a drive for their cause led the founding members to realise their dreams and create a place for all. This drive pushed them past every challenge they came up against, and now the Tamils of Australia have place to share, experience and learn Tamil and Saiva culture and heritage.

In these modern times, we must commend their efforts and gain from them a drive for ourselves to help maintain the Saiva Manram's objectives well into the future. The founding members successful planning and careful considerations will undoubtedly prove to be invaluable. As a new generation of Sydney Tamils, we must work with the same devotion and drive to safeguard the Sydney Murugan Temple, ensuring its enduring legacy. Just like the founding members faced their challenges we must also confront evolving challenges to ensure this temple continues to serve as a beacon of Tamil and Saiva culture for generations to come.

The Sydney Murugan Temple, stands as a testament to the enduring power of vision, dedication, and community spirit. It's establishment, a dream realised through the tenacity of the founding members continues to inspire us today. Like them lets overcome challenges whilst with the same unwavering drive, preserve the temple's rich heritage for the benefit of all, both today and well into the future.

அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்

Shun not a task because it is tough; perseverance brings respect. - Thiruvalluvaar

# Miracles of Saiva Saint Thirugnanasampanthar Swamikal



Siva P.Abiram SG

Thirugnanasampanthar was a Saiva poet/saint, who lived in the seventh century CE.He is one of the most prominent saints amongst the 63 Nayanars. Sampathar's entire collection of hymns about Lord Shiva is called "Thirukkadaikappu''. These were later collected to form the first three volumes of the Thirumuraikal – one of the principle texts for Saiva Sithantham philosophy.

Sampanthar was once staying in the Thiruvaduthurai temple in Mayiladuthurai, one day his father(Sivapathaviruthayar) came there to meet him. Thiruvaduthurai temple was built by the cholas during 9th century C.E, with additions later made by chola kings. The temple has five entrance towers known as gopurams. There is another story which is associated with this temple, with the saiva saint Thirumoolar. Thirumoolar was walking around the temple when he saw a herd of cows mourning the death of their herder, Moolan. Thiru moolar entered the body of Moolan to serve as a herder. When he came back to where he left his original body, he couldn't find it. Thirumoolar took it as an act of Sivan and continued to remain in the body of Moolan for the rest of his life. It was in this temple where Sampanthar's father asked Sampanthar for some gold coins he could use to do prayers in Sirkali. However, Sampanthar had no gold, so Sampanthar praised Sivan with the hymn "Idarinum Thalarinum", and Sivan granted Sambanthar with some gold. The hymn goes as follows.



இடரினுந் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோயெமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோவு உனது நின்னருள் ஆவடு துறையரனே

Idarinum Thalarinum enadhuru noy
thodarinum unakalal tholudheluven
kadalthanil amudhodu kalanthananchai
midarinil adakkiya vedhiyane
idhuvoemai yaluma rivadhon Remak killai yei
Adhuvo vuna dhinnarul avadu thuraiyarane

In English this translates to, when I am undergoing sufferings. When I am depressed in spirit. when my big karmams follow me I shall wake up from sleep worshipping your feet. Sivan who controlled the poison which was mixed with the nectar in the ocean of milk and made it stay in the neck!if there is nothing to give to us. Is this way you admit us as your protege? Is your sweet grace like that?

While singing this hymn, Sivan granted him a bag of gold coins through a Sivabootha. The Sivabootha gave Sampanthar the bag and told him there were a thousand coins in the bag and the bag would never become empty. Sampanthar received the bag with gratitude and gave it to his father, who left to Sirkali to perform some prayers.

# சிட்னியில் சைவமும் தமிழும் தழைக்க வேண்டி முருகனுக்கு அடியார்கள் கட்டிய அற்புதக் கோயில்

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே

ஊர் ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறிஅயர் களனும்
காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
ஆறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்
- திரு முருகு 220-226

மேலுள்ள பாடலில் முருகன் எங்கெங்கெல் லாம் விரும்பி உறைகிறான் என்று திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் அவர்கள் எடுத்தியம்புகிறார்.

அதிலே, ஊர்கள் கொள்ளுகின்ற அடியவர் களின் விழாக்களிலில் முருகன் எழுந்தருளுவான் என்று குறிப்பிட்டது போல், சிட்னி வாழ் அடியார்கள் முருகப் பெருமான் உதித்த நாளை நினைவு கூர்ந்து, பெருமானின் அருளை வேண்டி, 1986ம் ஆண்டு வைகாசி மாதம் 25ம் திகதி பேவூட் மசோனிக் மண்டபத்தில் வைகாசி விசாகத்தன்று, வாழை மரங்கள், தோரணங்கள், மாவிலைகள் அசைந்தாட, மங்கல விளக்குகளும், மின் விளக்குகளும் விண்மீன்கள்போல் கண் சிமிட்டி ஒளியூட்ட, வாசனைத் திரவியங்களின் நறுமணம் மண்டபம் முழுவதும் நிரம்பியிருக்க, வண்ணமலர் மாலைகளின் அலங்காரப் பின்னணியில் பாலமுருகன் கோல எழில் காட்டி எழுந்தருளினான்.

வைகாசி குன்றினிலே எழுந்தருளத் திருவுளம் கொண்ட முருகப்பெருமானே, அடியவர்களின் மனதிலும், அவர்கள் எடுத்தவிழாவிலும் எழுந்தருளி அருள்பாலித்தார் என்றால் மிகை யாகாது. அவ்விழாவிலே, தொடர்ந்து வரும் வெள்ளிக்கிழமை முதல் சரத்பீல்ட் மகளிர் உயர்தரப் பள்ளியில் முருக வழிபாடு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. இதுவே முருகன் கோயில் எழுவதற்கு அடுத்த படியாக அமைந்தது.

### தேமதுரத் தமிழ்த் தெய்வ வழிபாடு

வைகாசி விசாக விழாவில் வழிபட்ட முருகன் திருவுருவச்சிலையானது திரு. சி. தணிகைஸ்கந்தகுமார் அவர்களுடையது ஆகும். இந்த திருவுருவம் 1983ம் ஆண்டு இலங்கையில் இருந்து கொண்டுவரப்பட்டதாகும். முதலாவது வாராந்த முருகவழிபாடு சரத்பீல்ட் மகளிர் உயர்தரப் பள்ளியில் 30-05-1986 வெள்ளிக் கிழமை ஆரம்பமாகியது. இந்த வழிபாட்டில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் அல்லது இருவர் முருகன் திருவுருவச் சிலைக்கு மலர் தூவ, இனிய தமிழில் முருகன் நூற்றியெட்டு நாமப் போற்றியை எல்லோரும் ஓதுவார்கள். பின்னர் இக்குடும்பத்தில் ஒருவர் மங்கள தீபாராதனையைக் காட்டும் போது, எல்லோரும் ஒன்றிணைந்து **"ஆறிரு தடந்தோள் வாழ்க"** என்னும் கச்சியப்பர் அவர்களின் வாழ்த்தினை பாடுவார்கள்.

ஆறிரு தடந்தோள் வாழ்க
ஆறுமுகம் வாழ்க - வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க - செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் அணங்கு வாழ்க
மாறில்லா வள்ளி வாழ்க
வாழ்க சீர் அடியார் எல்லாம்

பின்னர் முருகப்பெருமானுக்கு காட்டிய தீபத்தை எல்லோரும் வணங்கி திருநீறு, சந்தனம் பெற்றபின், சிறுவர்களின் திருமுறைப் பாடல்கள் பாடுவார்கள். சிலவேளைகளில் பெரியவர்களின் சமயச் சொற்பொழிவுகளும் இடம்பெற்று வந்தன. குழந்தைகளும் பெரியவர்களும் ஒன்றாக இணைந்து முழுமையான ஈடுபாட்டுடன் செந்தமிழில் பூசை செய்து ஆனந்த மயமான திருப்தியை அடைந்தனர்.



சைவ மன்றம் ஆரம்பச் செயற்குழு

### சைவ மன்றத்தின் தோற்றம்

முருகனை வழிபட வசதி செய்யும் வகையில் சிட்னியில் ஓர் அமைப்பினை ஆரம்பிக்க எண்ணிய கலாநிதி இராசு வடிவேலு அவர்கள், 1985ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் கழகங்கள் பதிவு செய்யும் ஆணையாளரிடம் **"சைவமன்றம்"** என்ற பெயரை முன்பதிவு (Name Reservation) செய்து வைத்தார். இதில் சைவ மன்றம் என்ற உயரிய பெயர் எடுத்துக்கொள்ளப்பட்டமை மற்றும் அதன் பின்னுள்ள எண்ண ஓட்டங்களை நாங்கள் நிச்சயம் சிந்திக்கவேண்டும். இதில் வடிவேலு ஐயாவின் ஆழ்ந்த சிந்தனையை, அதன் பின்னணியை நாம் எக்காலத்திலும் மறந்துவிடக்கூடாது.

இந்தக் கழகப்பதிவில் ஆரம்ப உறுப்பினர் களாக கலாநிதி. இராசு வடிவேலு, திரு. க. சந்திரன், திரு. சி தணிகைகந்தகுமார், திரு. ஆ பகீரதன் மற்றும் திரு. அ பவராஜா அவர்கள் இருந்துள் ளார்கள். பின்னர் சைவமன்றத்தின் முதலாவது தலைவராக கலாநிதி. இராசு வடிவேலு அவர்கள் இருந்து, மன்றத்தின் யாப்பினையும், நிர்வாக நடைமுறை விதிகளையும் தயாரிப்பதில் முக்கிய பங்கேற்று மன்றத்திற்கு உறுதியான ஓர் அடித் தளம் அமைத்தமை குறிப்பிடத்தக்கது.

மேன்மைகொள் சைவநீதி சிட்னியிலும் விளங்க, சைவமன்றம் ஒரு கழகமாக அங்கீகரிக்கப் பட்டு பதிவுசெய்யப்பட வேண்டும் என்று எம்பெருமானை வேண்டி இருக்கையில், 6-11-1986 அன்று கந்தன் கவின் அறுமைப் பிறைநாள் வழிபாட்டின் போது பதிவிடப்பட்ட செய்தி வெளிவந்தது.

### சிட்னியில் திருக்கோயில் அமையவேண்டி செந்தமிழ் விண்ணப்பம்

முருகப் பெருமானின் அருளாட்சி சிட்னியிலே, திருக்கோயில் அமையப்போகிறது எனும் நம்பிக்கை வரப்பெற்ற நிர்வாகக் குழுவினர் **"சிட்னியிலே முருகன் கோயில் கொள்ள வேண்டும்"** என்று மன்றாடி இரந்து பாடி வழிபடுவதற்கு உகந்த பத்திப்பாடல் ஒன்றை எழுதி, அதனை கந்தன் கவின் அறுமை விரதகாலத்தில் அடியார் கள் பாடவேண்டும் என்பதற்கு அமைய **"அரோகரா அரோகரா"** என்று ஆரம்பிக்கும் சிட்னி முருகன் புகழ்மாலை, அவன் திருச்செவிகள் குளிரும் வண்ணம் விண்ணப்பம் செய்யப்பட்டது.

செந்தமிழர் சேவிக்கும் சேவற்கொடியோய்
சைவர்கள்நாம் சரணடைந்தோம் அரகரோகரா
சிட்னியிலே கோயில் கொள்வீர் கோலமுருகா
காலகாலம் தொழஅருளும் தோகைமயிலா

இந்தக் கூட்டு தமிழ் வழிபாட்டின் பயனாக இன்று சிட்னியில், தமிழரின் அடையாளமாக, கம்பீரமாக உயர்ந்து நிற்கும் கோயிலும் தமிழ் வழிபாட்டின் அற்புதங்களில் ஒன்று என்றால் மிகையாகாது.

### சிட்னி முருகன் கோயில் திருப்பணி ஆரம்பம்

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும்
ஞானசம்பந்தனுக்கு உலகவர் முன்
தாளம் ஈந்தவன் பாடலுக்கு இரங்கும்
தன்மை யாளனை என்மனக் கருத்தை
ஆளும் பூதங்கள் பாட நின்றாடும்
அங்கணன் தனை எண்கணம் இறைஞ்சும்
கோளிலிப் பெருங்கோயில் உள்ளானைக்
கோலக்காவினில் கண்டு கொண்டேனே
- சுந்தரமூர்த்தி நாயனார்

கோளிலிப் பெருங்கோயில் உள்ளானைக் கோலக் காவினிற் கண்டு கொண்டேனே என் பதைப்போல், பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் அமையவிருக்கும் முருகன் திருக்கோயி லினை சைவ மன்றமானது, 1987ம் ஆண்டே சிட்னி வாழ் சைவப் பெருமக்களின் மனத்திரை யில் கொண்டுவந்தது. சிட்னி முருகன் திருக் கோயில் நிறுவும் பணி வெற்றிகரமாக நிறைவேற வேண்டி, முருகப்பெருமானுக்கு இலட்சார்ச்சனை வழிபாடு என்று 12 மணிநேர வழிபாட்டு நிகழ்ச்சி ஒன்றினை 25-10-1987ம் ஆண்டு சைவ மன்றம் நடாத்தியது. காலை 7 மணிமுதல் மாலை 7 மணிவரை, மணிக்கு ஒரு குழுவென்று மக்கள் திரள் திரளாக வந்து எம்பெருமானைத் தரிசித்து, தமிழில் முருகன் பேராயிரம் போற்றி கூறி மலர் தூவி தீபாராதனை செய்து வழிபாடு செய்தார்கள்.

### தேடித்தேடி வாடியிருக்க நாடிவந்த வைகாசிக் குன்று

முருகப் பெருமானின் திருவுருவச் சிலையை பெட்டியில் வைத்து, மண்டபம் மண்டபமாக கொண்டு சென்று வைத்து வழிபடாது, எங்காவது நிரந்தரமாக வைத்து வழிபடவேண்டும்


சிட்னி முருகனுக்கு அடிக்கல் நாட்டல்

என்று முருக பக்தர்கள் அனைவருமே ஒருமனதாக விரும்பினார்கள். காணி, வீடு, தேவாலயம் போன்ற எதுவாகவிருந்தாலும் அதனை வாங்கி ஆவன செய்து எம்பெருமானை நிரந்தரமாக

(14ஆம் பக்கம் பார்க்க)

# சிட்னியில் சைவமும் தமிழும் தழைக்க வேண்டி...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமர்த்திவிட வேண்டுமென்று கொன்கோட் முதல் இரவுசுகில், டூண்சைட் வரையான இடங்கள் வரை தேடி அலைந்தார்கள். அத்துடன் காணி வாங்குவதற்கு போதிய பணம் இல்லாமல் இருந்ததும், காணியை வாங்கிய பின் நாம் விரும்பியபடி வழிபாட்டு நிலையத்தை அமைக்க அவ்விடத்து நகரசபை அனுமதி தரும்? என்பதும் பல சந்தர்ப்பங்களில் ஒரு முடிவு எடுக்க முடியா மல் எங்களைத் தடுத்து வந்தன.

இந்நிலையில் 1990ம் ஆண்டில் தற்போதைய கோயிற்காணியை, வீதிகள் போக்குவரத்துச் சபை (RTA) இடமிருந்து அதனில் வழிபாட்டு நிலையம் கட்டுவதற்குரிய Holroyd Council இனால் அபிவிருத்தி விண்ணப்பம் அங்கீகரிக்கப் பட்டால் மட்டும் தவணை முறையில் பணம் கட்டி வாங்குவதற்குரிய வாய்ப்பு கிட்டியது.

இதற்கு Ethnic Affairs Commission தனது பூரண ஆதரவை நல்கியது. எங்கெல்லாமோ தேடி எதுவுமே சரிவராத நிலையில் இப்படி ஒரு அருமையான சந்தர்ப்பம் வரவே, அதனை



நழுவவிடக்கூடாது என்று அக்காணியை வாங்க சைவமன்றம் தீர்மானித்தது. வீதிகள் போக்குவரத்து சபையுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு அக்காணியில் சிட்னி முருகன் கோயிலும், தமிழ் கலாச்சாரக் கல்வி நிலையமும் கட்டுவதற்குரிய திட்டமிடல் நடவடிக்கைகள் ஆரம்பமாகின. இந்தக் கடினமான காலக்கட்டத் தில் திரு.க.சந்திரன் அவர்கள் மன்றத்தின் தலைவராக இருந்து செவ்வனே பணியாற்றினார்.

இந்த இடத்தின் பெயர் ஆங்கிலத்தில் Mays Hill ஆகும். அயலிடங்களில் ஒப்பிடும் போது இது ஓர் உயர்வான இடமாகும். குன்றிருக்கும் இடமெல்லாம் குடிகொண்ட குமரனுக்கு, சிட்னியிலும் வைகாசிக் குன்று (Mays Hill) இருப்பிடமாக வந்தமைந்த விந்தைகண்டு சைவப்பெருமக்கள் எல்லோரும் வியந்து போனார்கள்.

### சிட்னி முருகன் செய்தி மடல் வெளியீடு

சைவ மன்றத்தின் பலவகையான பணிகளை அங்கத்தவர்களுடனும், அடியார்களுடனும் கருத்துப் பரிமாற்றம் செய்வதற்கு ஒரு ஊடகம் தேவைப்படுவதன் அவசியத்தை உணர்ந்து, ஒரு செய்தி மடலை வெளியிட வேண்டுமென்ற எண்ணம் சைவ மன்றத்தில் தோன்றியது. சரத்பீல்ட் நோர்த் பப்ளிக் (Strathfield North Public School) பள்ளியில் 6-6-1993 அன்று நடைபெற்ற வைகாசி விசாக விழாவில், சிட்னி முருகன் செய்தி மடலின் முதலாவது இதழ் வெளியீடு செய்து வைக்கப்பட்டது. அன்றுமுதல் இந்த செய்தி மடல் காலாண்டுக்கொரு முறையாக வெளிவர ஆரம்பித்தது.

### வைகாசிக் குன்றில் அரோகரா ஓசை

ஆண்டாண்டு காலமாக ஒலிக்கவிருக்கும் அரோகரா ஓசை சனிக்கிழமை 22-01-1994 காலை முதன் முறையாக அங்கு ஒலித்தது. கோயிற்காணி புனிதமாக்கும் பூசையில் கலந்துகொண்ட பெருந்திரளான பத்தர்களே இவ்வாறு அரோகரா கோசம் எழுப்பி சிட்னி முருகனை வழிபாடு செய்தார்கள்.

காணியில் தற்காலிகமாக அமைக்கப்பெற்ற கூடாரத்தில் எம்பெருமானை எழுந்தருளச் செய்து சோமஸ்கந்தக் குருக்கள் தலைமையில் பூமி புனிதமாக்கும் பூசை நடைபெற்றது. இந்நிகழ்ச்சியினை அப்போது சைவ மன்றத் தலைவராக இருந்த திரு.நா. மகேசன் அவர்கள் சிட்னி வாழ் சைவப் பெருமக்கள் சார்பில் முன்னின்று நடாத்தினார்.

அக்காணியில் சிட்னி முருகன் கோயிலும் தமிழ்க் கலாச்சார கல்வி நிலையமும் கட்டுவதற்கு உழடாசழலன ஊழரஉெடை இன் அனுமதி கிடைத்ததைத் தொடர்ந்து முதலில் தமிழ் கலாச்சாரக் கல்வி நிலையத்தைக் கட்டி அதல் எம்பெருமானை வைத்து வழிபடுவோம் என்னும் எண்ணத்துடன் வேலைகள் ஆரம்பமாகின.

### அருள்மழையுடன் வான்மழையும் பொழிய அடிக்கல்

சமய மரபுக்கு அமைய, கோயில் காணியை தூய்மைப் படுத்துவதற்காக நடைபெற்றதே பூமி புனிதமாக்கும் பூசையாகும். அதனைத் தொடர்ந்து சிட்னி முருகன் கோயிலுக்கும், தமிழ் கலாச்சாரக் கல்வி நிலையத்திற்கும் 9-9-1994 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. அன்று அதிகாலை முதல் வானம் பளிச்சென நீல நிறத்துடன் இருந்தது. திடீரென அது கருமேகங் களால் சூழப்பெற்று பெருமழை பொழியத் தொடங்கியது. அத்திவாரக் கிடங்குகள் உட்பட முழுக் காணியுமே மழை நீரால் கழுவப்பெற்றுத் தூய்மை பெற்றன. மனிதரால் இயலாத காரியம் இயற்கையால் செய்யப்பட்டது. அடிக்கல் நாட்டுவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்பாக மழை நின்று வானம் வெளுக்க ஆதவனும் தன் கதிரொளியைக் காட்டினான்.

இந்நிகழ்ச்சி எம்பெருமான் தன் ஆணையையும், வாழ்த்தினையும் இத்திருப்பணிக்கு வழங்கியது போன்று அமைந்தது. அங்கு கூடியிருந்த அடியார்கள் இது வான் மழையன்று, வேலவன் தன் அருள்மழையே என்று கந்தன் புகழ் பாடி அவன் கருணையில் நனைந்து பத்தி வெள்ளத்தில் மிதந்த வண்ணம் சிட்னி முருகன் கோயிலுக்கும், தமிழ் கலாச்சார கல்வி நிலையத்திற்கும் அடிக்கல் நாட்டினார்கள்.

வீதிகள் போக்குவரத்துச் சபையுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி 1-11-1994ல் வட்டியு டன் முழுப் பணமும் செலுத்தி முடிக்கப்பட்டது. அன்று முதல் வைகாசிக் குன்று கோயில் இடம் சைவர்கள் சொத்தாகியது.

### தமிழ்க் கலாச்சார மண்டபத்தில் குடி கொண்ட குமரன்

சிட்னி முருகனை 1995ம் ஆண்டு தமிழ் புது வருடத்தில் தமிழ் கலாச்சார கல்வி நிலையத்தில் திருநிலைப்படுத்தும் நோக்கத்தோடு கட்டிட வேலைகள் துரிதகதியில் நடைபெற்றன. இந்தியாவிலிருந்து சித்தி விநாயகர், நடராசர், சிவகாமசுந்தரி ஆகிய உற்சவ மூர்த்திகள் கொண்டுவரப்பட்டன. தமிழ் புதுவருடப்பிறப்பு தினமான 14-4-1995 வெள்ளிக்கிழமை, தமிழ்க் கலாச்சார மண்டபத்தில் விநாயகர், நடராசர், சிவகாமசுந்தரி ஆகிய உற்சவ மூர்த்திகள் உட்பட இதுவரை காலமும் வழிபட்டுவந்த சிட்னி முருகன் திருவுருவச்சிலையும் பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் தலைமையில் திருநிலைப்படுத்தப்பட்டன.

இதனைத் தொடர்ந்து திருக்கலியாணம், சங்குநீராட்டு, திருவிளக்குப் பூசை, இலட் சார்ச்சனை, நீராட்டு என்பன நடைபெற்றன. அப்போது சைவ மன்றத் தலைவராக இருந்த



கலாச்சார மண்டபத்தில் ஆரம்ப கோயில்

திரு.தா சிவசுப்பிரமணியம் அவர்கள் சிட்னி வாழ் சைவப்பெருமக்கள் சார்பில் இந்த திருநிலைப்படுத்தும் வைபவத்தை முன்னின்று நடாத்தினார்.

**தென்னாட்டு ஆசிரியர் குறிப்பு:** இந்த திரு நிலைப்படுத்தல் (14-4-1995) நிகழ்வுக்கு முன்னரே, பல ஆண்டு காலமாக அடியவர்களின் முருகனை, தாங்கள் வைத்திருந்த சிலையில் எழுந்தருளச் செய்து, தமிழில் மட்டுமே பாடிப் பரவி, தமிழ் அர்ச்சனை மட்டுமே செய்து, **"சிட்னியிலே முருகன் கோயில் கொள்ள வேண்டும்"** என்று மன்றாடி இரந்து பாடி, வழிபடுவதற்கு உகந்த தமிழ் பத்திப்பாடல் ஒன்றை எழுதி அதனை வாரம்தோறும் பாடி, அவன் அருளால் அவன் தாள் வணங்கி என்பதற்கு அமைய, வைகாசிக் குன்றிலே காணியை வாங்கி, வான்மழையுடன் அருள்மழையும் பொழிய அடிக்கல் நாட்டி, இந்த கலாச்சார மண்டபத்தி னைக் கட்டி, கோயிலாக்கினார்கள் என்பதை அடியவர்கள் அக்கண்ணால் பார்த்து தெளிய வடைய வேண்டும்.

### மன்றத்தினர் இயற்றிப் பாடிய செந்தமிழ் பாடல்

செந்தமிழர் சேவிக்கும் சேவற்கொடியோய்
சைவர்கள்நாம் சரணடைந்தோம் அரகரோகரா
சிட்னியிலே கோயில் கொள்வீர் கோலமுருகா
காலகாலம் தொழஅருளும் தோகைமயிலா
சதுமறை ஆரியம் வரும் முன் சகம் முழுதும் நினதாயின்
முதுமொழி நீ அநாதி என மொழிகுவதும் வியப்பாமே

- மனோன்மணீயம்

### அடியார்களின் அதிகரிப்பும் ஆலயத்தின் விரிவும்

தமிழ் கலாச்சார மண்டபத்தில் வீற்றிருக்கும் குமரனின் புகழும் அருளும் அடியார்கள் மத்தி யில் பரவ அவனைத் தரிசிக்க வரும் அடியார்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரிக்க ஆரம்பித்தது. சில வெள்ளிக்கிழமைகளிலும், சிறப்பு வழிபாட்டு நாட்களிலும் மண்டபம் நிரம்பி வெளியிலும் பெரும் பத்தர்கள் கூட்டம் நின்று வழிபட வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்நிலையில் 1996ம் ஆண்டு கோயிற் காணிக்கு அருகில் இருக்கும் காணியையும் சைவ மன்றம் வாங்கக் கூடிய சூழ்நிலையொன்று உருவானது. ஆனால் சைவமன்றமோ அக்காணியை வாங்குவதற்குரிய பணமோ, கோயிலைக் கட்டி முடிப்பதற்குரிய பணமோ இல்லாத நிலையிலும், அடியார்களின் ஆதரவையும், முருகனின் அருளையும் நம்பி அக்காணியை வாங்குவது எனும் துணிச்சலான ஒரு முடிவை எடுத்தது. அவ்வேளையில் திரு.சுந்தர் ஈஸ்வரன் அவர்களின் தலைமையில் இயங்கிய சைவ மன்ற நிர்வாகக் குழு இக்காணியைக் கடன் பெற்று கொள்வனவு செய்வதில் அரும்பணியாற்றியது.

### கோயில் கருவறைகள் உருவாகின

இதுவரை காலமும் நிலத்திற்குக் கீழும், நில மட்டத்துடனும் நடைபெற்ற வேலைகள் நிறை வுற்று, தரைக்கு மேலான கட்டிட வேலைகள் 21-4-1997இல் ஆரம்பமாகின. சித்தி விநாயகர், மூலவர் (முருகன்), சிவன், சிவகாமசுந்தரி, வள்ளி தெய்வயானை உடன் முருகன் ஆகியோர் எழுந் தருளவுள்ள கருவறைகளின் கட்டிட வேலைகள் ஆரம்பமாகின.

(15ஆம் பக்கம் பார்க்க)

# சிட்னியில் சைவமும் தமிழும் தழைக்க வேண்டி...

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்நாளில் எல்லோருக்கும் கிடைக்காத இவ்வரிய வாய்ப்பு தமக்குக் எம்பெருமான் அருளியதை, வாழ்த்திய வண்ணம் அடியார்கள் செங்கற்களை கருவறைச் சுவர்களில் வைத்து கோயிற் கட்டிடத் திருப்பணியில் ஈடுபட்டு உளம் மகிழ்ந்தனர்.

இதனைத் தொடர்ந்து கோயிற் கட்டிட வேலைகள் துரித கதியில் நடைபெற்றன. இராசகோபுர வேலைகள் 1999ம் ஆண்டு தைப்பூச நன்நாளில் ஆரம்பமாகியது. இதே வேளையில் புகழ் பெற்ற கோயில் கட்டிடக் கலைஞரான முத்தையா தபதி (பெருந்தச்சன்) அவர்களினால் கருவறைகளில் எழுந்தருளவுள்ள மூர்த்திகளும் தமிழகத்தில் அழகாக உருவாகின.

### சிட்னி முருகனுக்குக் கடவுள் மங்கலம்

அருள்மிகு சிட்னி முருகன் திருக்கோயில், கடவுள் மங்கல நன்னீராட்டு விழா கூலவள (பிரமாதி) ஆண்டு ஆனி மாதம் 3ம் நாள் (17-6-1999) வியாழக்கிழமை, நான்மைப் பிறை நாளும், பூச நட்சத்திரமும் கூடிய நன்னாளில் காலை 10.45 இற்கும் 11.30 மணிக்கும் இடைப் பட்ட சிம்ம இலக்கினத்தில் நடைபெற திருவருள் கூடியது.

இந்தப் பெருநிலையை சைவ மன்றம் அடைவதற்குத் தங்களால் இயன்ற பலவழிகளில் உதவிய அடியார்களின் தொகை எண்ணி லடங்காது. உள்நாட்டு, வெளிநாட்டு கலைஞர் களின் பல கலை நிகழ்ச்சிகள் மூலமும், வேறுபல வழிகளிலும் கோயில் கட்ட நிதி சேர்க்கப்பட்டது.

1999ம் ஆண்டு வெளியிடப்பட்ட திருகுட முழுக்கு இதழில் தலைவரின் செய்தியில் (திரு.ச. ஆதீஸ்வரன்) இருந்து ஒரு பகுதியை கீழே காண லாம்.

ஆலயந் தொழுவது சாலவும் நன்று என்ற ஔவையார் வாக்கினைப் பிள்ளைகளுக்குச் சொல்லி வைக்கிறோம். சிட்னி வாழ் எமது இளஞ்சந்ததியினர்க்கு கடவுள் நம்பிக்கையை வளர்த்து, பத்தி நெறியின் அருமை உணர்த்திட முருகன் முதலாம் மூர்த்திகள் எழுந்தருளும் இந்தத் திருக்கோயில் மிகவும் பயனளிக்கப் போகிறது. இந்தத் தெய்வப்பணி இடத்தால், காலத்தால் அவசியம் வேண்டிய தொன்றாக இருக்கப் போகிறதென்பதை எண்ணும் போதெல்லாம் உள்ளம் சிலிர்க்கிறது. பெருமிதமும் மகிழ்ச்சியும் ஏற்படுகின்றது.

### அழகன் முருகனின் எழில்மிகு ஆலயம்

வைகாசிக் குன்றில் குமரன் குடிகொண்டுள்ள கோயிற் காணியின் அளவு 11,000 சதுர மீற்றர்களாகும். அவன் அமர்ந்துள்ள ஆலயத்தின் நீளம் 37 மீற்றர்கள் மற்றும் அகலம் 21 மீற்றர்கள் ஆகும். பிரபல தபதி நாகராசா அவர்களின் தலைமையில் இந்திய சிற்பக்கலைஞர்களின்



கைவண்ணத்தில் உருவான சிட்னி முருகன் திருக்கோயில் இங்குள்ள சைவப் பெருமக்களின் சொத்தாகவும், அடையாளச் சின்னமாகவும் விளங்கும். பளிங்கு போல் தரையும், திரும்புமிட மெல்லாம் தெரியும் கவின்மிகு கலைநுட்பக் கோலங்களும், சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த விமானங்களும், சேலத்தில் செய்த தேக்குமர மணிக் கதவுகளும், கோயிலுள் புகுந்தவுடன் அடியவர் மனங்களைக் கவர்ந்துவிடும் என்பதில் ஐயமில்லை.

அத்துடன் கோயிலினுள் நவக்கிரகங்கள், பைரவர், சண்டேசுவரருக்கும் சந்நிதிகள் உண்டு. மேலும் கோயிலினுள் அழகான பல அலங்காரத் தூண்கள் உள்ளன. அவற்றில் மாமல்லபுர சிற்பி



திருகிருஷ்ணமூர்த்தி அவர்களின்கைவண்ணத்தில் உருவான ஆறுபடை வீடு கொண்ட முருகனின் ஆறு திருவுருவச் சிலைகளும், ஈழநாட்டின் திருத்தலங்களான கதிர்காமம், செல்லச்சந்நிதி, வெருகலம்பதி, நல்லூர் திருக்கோயில்களில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமானின் நான்கு திருவுருவச் சிலைகளும் அமைந்துள்ள காட்சி அற்புதக் காட்சியாகும்.

சிறந்த கலைநுட்ப வேலைப்பாடுகள் மிகுந்த வசந்த மண்டபத்தில் இதுகாறும் நாம் வழிபட்ட உற்சவ மூர்த்திகள் எழுந்தருளியிருக்கும் காட்சி காண்போர் மனதைக் கொள்ளை கொள்ளும். இவை எல்லாவற்றையும் காண்பதற்கு முன்பு, கோயிலினுள் நுழைவதற்கு முன்பு நாம் காண்பது சுமார் 12 மீற்றர்கள் உயரமுடைய இராசகோபுர மாகும். கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பார்கள். அதை நினைவூட்டும் வகையில் கண்கவர் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த இக்கோபுரம் கம்பீரமாக வைகாசிக் குன்றில் காட்சியளிக்கின்றது.

### சிட்னி முருகன் திருக்கோயில் இரண்டாம் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா

ஆண்டுகள் உருண்டோடின. மீண்டும் பல வகையான திருத்தங்கள், காணிக் கொள்வனவுகள், சமய சமூக செயற்பாடுகள் என சைவ மன்றம், சங்கம் வளர்த்த முருகவேளின் திருவருளுடன் மீண்டும் புதுப்பொலிவுடன் இரண்டாம் பெருஞ்சாந்திப் பெருவிழாவிற்கு தயாராகியது.

இந்தப் பெருஞ்சாந்தியானது செய்நேர்த்தி ஆண்டு (கர), தைத் திங்கள் 15ம் நாள் (29-01-2012) ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 தொடக் கம் 11.30 மணிவரையான நேரத்தில், வளர்பிறை அறுமைப் பிறை நாளும், சித்த ஒகமும், இரேவதி (தோணி) நட்ச்சத்திரமும் கூடிய நல்வேளையில், வைத்தியக் கலாநிதி வைரமுத்து மனோமோகன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

2012ம் ஆண்டு வெளியிடப்பட்ட திருகுட முழுக்கு இதழில் தலைவரின் செய்தியில் இருந்து ஒரு பகுதியை கீழே காணலாம்.

எமது தேவார திருவாசகங்களும் அவற்றைப் பிழிந்து சாறாக்கிய சைவ சித்தாந்த நூல்களும் தமிழ் மொழியில் மட்டுமே கருவுற்றுப் பிறந் தவை. எனவே சைவர்கள் என்று கூறிக்கொள்ளும் நாம் எமது கோயில் வழிபாட்டில் தமிழ் மொழியை ஆழமாகவும் பரவலாகவும் உள் வாங்கி அந்த மொழியில் பூசைகளையும் அர்ச் சனைகளையும், சடங்குகளையும் செய்யும்போதே தமிழரின் தனித்துவமான சித்தாந்தத்தின்வழி நாம் நிற்க முடியும். இன்று முருகன் கோயிலில் இடம்பெறும் முதற் புனருத்தாரணத்தில் எமது சிந்தனைகளையும் புனருத்தாரணம் செய் வோமாக.

மந்திரமும் மருந்தும் ஆகிய திருமுறைகள் அடங்கிய பூசை, வழிபாடு, அர்ச்சனை, சடங்கு என்பவற்றைத் தமிழ் மொழியிலும் செய்யும் போது, நாம் அவற்றின் பொருள் உணர்ந்து மனமொன்றிப் பத்தி உணர்வில் கலக்கலாம். இறை உணர்வில் திளைக்கலாம். இவ்விதம் எமது கோயிலில் தமிழிலும் வழிபாடு செய் வதன்மூலம் நாம் பயன் பெறுவது மட்டுமின்றி, சிட்னி முருகன் கோயில், புலத்தில் உள்ள ஏனைய கோயில்களுக்கும் முன் உதாரணமாகவும் திகழலாம்.

இதனை எழுத்திலும், சொல்லிலும் மட்டும் இல்லாமல், இரண்டாவது திருக் குடமுழுக்கில் செய்தும் காட்டியுள்ளார்கள் தலைவரும், நிர்வாகக் குழுவினரும். இந்தியாவிலே இருந்து திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் மருமகனாகிய,ஏறத்தாழ 1674 செந்தமிழ் திருக்குட நன்னீராட்டுகளை தமிழ் மந்திரங்களால் ஆற்றிய, 6700க்கு மேல் தமிழ் திருமுறை திருமணங்கள் மற்றும் வாழ்வியல் சடங்குளை செய்த தெய்வத்தமிழ் அறக்கட்டளை நிறுவனர் முதுமுனைவர்.மு.பெ.சத்தியவேல் முருகனார் அவர்களையும், அவரின் மகனாரையும் வரவ ழைத்து செந்தமிழிலும் இந்த திருக் குடநீராட் டினை செய்துவைத்தார். அத்துடன் சமசுகிரதத் தில் சிவாச்சாரியார்களும் செய்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வைகாசிக் குன்றில் அமைந்துள்ள சிட்னி முருகன் திருக்கோயில் சிட்னியிலே முருகப் பெருமான் தனது அருளாட்சியை நடாத்தத் தேர்ந்தெடுத்த இடமாகும். அங்கு நாடினோரை அவன் வாழவைப்பான். வேண்டும் வரமளிப்பான்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகெமெல்லாம்.**

**மூலம் - சிட்னி முருகன் திருக்கோயில், குடமுழுக்கு மலர் 1999 மற்றும் 2012.**

**எழுதியவர்: திரு.து.பவராஜா.**

**தென்னாட்டிற்கான ஆக்கம் - தென்னவன் பார்த்தீபன் (2023 - சிட்னி)**

# தென்னாட்டு நிகழ்வுகள்



அமரர் விஜயகாந்தன் ஐயாவின் திருவடிப்பேற்று (அந்தியேட்டி) வழிபாடுகள் (04,06-10-2023)



அமரர் சிவசுப்பிரமணியம் ஐயாவின் இறுதிச் சடங்கு வழிபாடுகள் (13-10-2023)





தாயுமானவர் சுவாமிக்கோயிலில் புலமைப்பரிசில் பரீட்சைக்கான சிறப்பு வழிபாடுகள் (11-10-2023)



பேரோடுக்க மறைமதி (மாலயம்) வழிபாடுகள் (14-10-2023)



கோணாவில் ஆலவாய் அண்ணல் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு (28-09-2023)



கோணாவில் ஆலவாய் அண்ணல் திருக்கோயில் சங்கு நீராட்டு (09-10-2023)



புரட்டாசித் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (29-09-2023)

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் முப்பத்து எட்டாவது திங்கள் செய்தியிதழ் "தென்னாடு", சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு துலை நல்லோரை ஐப்பசித் திங்கள் 11ம் நாள் நிறைமதி அன்று (28-10-2023 சனிக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 221 2739 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org